


இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524


















29ம் ஆண்டில்...
29 years of publishing

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் சுடர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada

Canada's Other Voices

$1.00

416-752-1524 www.uthayannews.ca

Canadian Media Circulation Audit

உதயம் 1583 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 7, 2026


## ஒன்ராறியோ அரசு ஸ்காபுறோ சென்டினரி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவை விரிவாக்க 82 மில்லியன் டொலர் ஒதுக்கீடு!

கடந்த செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 4 அன்று, ஸ்காபரோ ரூஜ் பார்க் சட்டமன்ற உறுப்பினரும் சுகாதார இணை அமைச்சருமான விஜய் தணிகாசலம் அவர்கள், துணை முதல்வரும் சுகாதார அமைச்சருமான சில்வியா ஜோன்ஸ் மற்றும் ஸ்காபரோ சட்டமன்ற உறுப்பினர்கள் ரேமண்ட் சோ, டேவிட் ஸ்மித் ஆகியோருடன் இணைந்து, ஸ்காபரோ சுகாதார வலையமைப்பின் சென்டினரி மருத்துவமனையில் புதிய மற்றும் விரிவாக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டுமானப் பணிகளை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்தார்.

(தொடர்டச்சி 6ம் பக்கம்)




## அநுரகுமார அரசுக்கு முட்டுக்கொடுக்கும் "தமிழரசு"




““இலங்கையின் கணக்காய்வாளர் நாயகமாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவரை நியமிக்கும் அநுர குமார அரசாங்கத்தின் நகர்வுக்கு, அரசியலமைப்பு பேரவை உறுப்பினராக ஆதரவாக வாக்களித்தார் என்ற ஒற்றைக் காரணத்திற்காக, தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் பதவியிலிருந்து சிவஞானம் சிறீதரன் எம்.பி.யை நீக்கிய .தமிழரசின் தலைமை இன்றோ அநுரகுமார அரசாங்கத்தின் ஒவ்வொரு நகர்வுக்கும் நிபந்தனையற்ற ஆதரவையும் “முட்டுக்கொடுக்கும்“ அரசியலையும் மிக நேர்த்தியாக வழங்கி வருகிறது““------கே.பாலா

---------------------------------------------------------------

தமக்கு விருப்பமில்லாத பாராளுமன்ற உறுப்பினருக்கு “கொள்கைவாதம்“ பேசுவதும், அதிகாரம் கொண்ட அரசாங்கத்திற்கு “அனுசரணைவாதம்“ பேசுவதும் தமிழரசுக்கட்சியின் தற்போதைய பாணியாக மாறியிருக்கிறது.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)





தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிராம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd Flr) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com



கனடிய செய்திகள்
Canadian News

# தனது சிறுவயது பரத நாட்டிய அரங்கேற்றத்தில் "நிருத்திய"த்தை நேர்த்தியாக நிலைநாட்டிய செல்வி நில்ஷா சஜிராஜ்!



கடந்த 02-08-2026 அன்று ஞாயிற்றுக்கிழமை பிரம்ரன் மாநகரில் அமைந்துள்ள அழகிய "றோஸ் தியேட்டர்" மண்டபத்தில் நடைபெற்ற அரங்கேற்றச் செல்வி நில்ஷா சகிராஜ் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றத்தில் பார்வையாளர்களாகவும் சிறப்பு விருந்தினர்களாகவும் உறவினர்கள் நண்பர்களாகவும் கலந்து சிறப்பித்த அனைவரையும் சில மணிநேரத்திற்கு "கட்டிப்போடும்" அளவிற்கு அமைந்தது என்பதே சரியான பார்வையாகும்.

அவரது நடனத் திறமைக்கும் அழகிய நடன உருப்படிகளை தனது சிறிய வயதிலும் கையாண்ட முறை மற்றும் மேடையின் முழுப்பகுதியையும் நேர்த்தியாக பயன்படுத்திய பயிற்சியின் மகத்துவம் மற்றும் நில்ஷாவின் குரு ஸ்ரீமதி நிவேதா ராமலிங்கத்தின் அற்புதமான கற்பித்தல் திறன், நடனங்களை அரங்கேற்றச் செல்விக்காக உருவாக்கிய ஒழுங்கு ஆகியவை







அன்றைய அரங்கேற்றத்தை "அனைவராலும் "பேசப்படும்" வகையில் மேடையில் சமர்ப்பிக்க உழைத்த அனைவருக்கும் ஒரு வெற்றிகரமான நாள் என்றே குறிப்பிட வேண்டும்.

பரத நாட்டியம் என்னும் ஒரு தெய்வீகக் கலை வடிவத்திற்குள் அடங்கும் ஏராளமான சிறப்பு அம்சங்களில் நிருத்தியம் என்பது அதற்குள் அடங்கும் மூன்று முக்கிய ஆடல் முறைகளில் ஒன்றாகும் என நடன முறைகளை அல்லது அதன் முக்கியத்துவத்தை உலகிற்கு தந்த விற்பன்னர்கள் பதிவு செய்த ஒரு அங்கமாகும். இது பரதநாட்டியத்தை மற்றவர்களுக்காக சமர்ப்பிக்கும் ஒரு நடனத்தாரகை அன்று பாடப்பெறும் பாடல்களின் பொருளுக்கும் இசைக்கும் ஏற்ப முகபாவனைகள், கை முத்திரைகள் மற்றும் உடல் அசைவுகள் மூலம் கருத்துகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தும் ஒரு வெளிப்படையான நடன இலக்கணமே "நிருத்தியம்" என்று அழைக்கப்பெறுகின்றவகையில் அன்றைய தினம் செல்வி நில்ஷா சகிராஜ் தனது நூறுவீத ஆற்றலை வெளிப்படுத்தி தனது குருவிற்கும் தனது பெற்றோர் மற்றும் அரங்கேற்றத்திற்காக உழைத்த அனைவருக்கும் நற்பெயரை பெற்றுக் கொடுத்துள்ளார் என்றே கூறவேண்டும்.

மிகவும் உன்னதமான முறையில் அழகிய மண்டபத்தில் அரங்கேறிய நில்ஷாவின் அரங்கேற்றம் இவ்வருடத்தின் அரங்கேற்றங்களில் "முத்திரை" பதித்த ஒன்று என்பதை உறுதியாகச் சொல்லலாம் என்பது நிதர்சனமே!

அன்றைய அரங்கேற்றத்தின் பிரதம விருந்தினராக இந்தியாவிலிருந்து வந்து கலந்து கொண்ட பிரதம விருந்தினர் ருக்மினி அவர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர் ஆகிய பரதநாட்டிய உலகில் நன்கு அறியப்பெற்ற நடன மணிகளாகவும் விமர்சனம் செய்யும் வித்தகர்களாகவும் உள்ளவர்களின் உரைகளில் நில்ஷாவினது அவரது குருவினதும் ஆற்றல் மற்றும் அர்ப்பணிப்பு தொடர்பான விடயங்கள் பகிரப்பட்டபோது சபையோர் கரகோசம் செய்து பாராட்டிய நேரத்தில் சபையோர் முழுமையான மகிழ்ச்சியை அனுபவித்தார்கள் என்பதும் நில்ஷாவின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் பெருமிதம் கொண்டிருப்பார்கள் என்பதே உண்மை.

அங்கு சிறப்புரையாற்றிய கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்களும் தனது சில நிமிடங்களாற்றிய உரையில் நில்ஷாவின் தந்தை வழி தாய் வழி உறவுகளின் சிறப்புக்களையும் குரு நிவேதா அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க நடனப் பயணம் தொடர்பாகவும் எடுத்துரைத்தார். அன்றைய பக்கவாத்தியக் கலைஞர்களில் பலர் கனடிய மண்ணில் நன்கு அறியப்பெற்றவர்களாகத் தொடர்பவர்களாக உள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

விழாவை மிருதங்கக் கலைஞரும் அறிவிப்பாளருமாக பிரசாந்த் தொகுத்து வழங்கினார்.

***- சத்தியன் பார்வையில்***

# புளோரிடா நகரில் இயங்கிவரும் "இலங்கை தமிழர் மன்றம்" நடத்திய விழாவில் கனடா வாழ் அறிவிப்பாளர் மா. மதிசயனுக்கு "குரல் நாயகன்" பட்டம் வழங்கப்பெற்றது




கடந்த 01-08-2026 அன்று சனிக்கிழமை அமெரிக்காவின் புளோரிடா நகரில் இயங்கிவரும் "இலங்கை தமிழர் மன்றம்" நடத்திய விழாவில் கனடா வாழ் அறிவிப்பாளர் மா. மதிசயனுக்கு "குரல் நாயகன்" என்னும் சிறப்புப் பட்டம் வழங்கப்பெற்றது.

மேற்படி பட்டத்தை விழா மேடையில் மன்றத்தின் தலைவர் ஸ்ரீகணேசன் கதிர்காமத்தம்பி அவர்கள் தலைமையில் ஏனைய முக்கிய உறுப்பினர்கள் இணைந்து வழங்கினார்கள். அத்துடன் அன்றைய விழா நிகழ்ச்சிகளையும் மதியசன் மாணிக்கவாசகர் அவர்களே தொகுத்து வழங்கினார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடதய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1
Annual Subscription Price $52.00
பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள்
உதயன்
Uthayan Publishers
- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 · Cell: 416 732 1608
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca · email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# யூலைப் படுகொலைகளின் நாற்பத்தி மூன்றாவது ஆண்டை, உணர்வுகளைப் பகிர்ந்த வண்ணம் நாம் கடந்தாலும் தொடர்ச்சியான கடமைகள் உள்ளதையும் அறிவோம்!

யூலை 1983 என்னும் அந்த "கொடிதானதும் துயரும் பயங்கரமும் நிறைந்த அந்த காலப்பகுதியில் இடம்பெற்ற அனர்த்தங்களையும் இழப்புக்களையும் நினைவில் நிறுத்தி இந்த யூலை மாதத்தின் இறுதி நாளை நாம் இன்று அடைந்துள்ளோம். எனினும் இந்த யூலை கொடுமைகளை மறந்து விடாமல் மனதில் நிறுத்தி அந்த நினைவுகளுடன் நாம் எப்போதும் ஒன்றியிருப்போம் என்று உறுதியும் எடுத்துக் கொள்வோம்.

தற்கால உலக அரசியலில் இனம் மற்றும் மொழிகளின் அடிப்படையில் மக்களை கூறுபோடுவதில் அரசியல்வாதிகள் தங்கள் காய்களை நகர்த்திய வண்ணம் தங்கள் பதவிகளை எப்போதும் தக்கவைத்துக் கொள்ளவே முயல்வார்கள். குறிப்பாக முதலாளித்துவப் போக்குள்ள அரசியல்வாதிகள் அந்த தேசத்தின் மக்களில் விவசாயிகளாகவும் தொழிலாளர்களாகவும் உள்ள மக்களை இனம் மற்றும் மதம் சார்ந்து பிரித்து வைப்பதே தங்கள் முதற்பணி என்பதை கவனித்துச் செய்வார்கள்.

அவ்வாறு தொழிலாளர்களையும் விவசாயிகளையும் அவர்களை மதம் மற்றும் மொழி சார்ந்து பிரிந்து நிற்கச் செய்தால் தொழிலாளர் மற்றும் விவசாயிகள் போராட்டம் என போராடும் சக்தியை அந்த உழைக்கும் வர்க்கம் குறைத்துக் கொள்ளும் என்ற உண்மையை முதலாளித்துவம் சார்ந்து தங்கள் அரசியலை நகர்த்திச் செல்லும் அரசியல்வாதிகள் உணர்ந்து கொண்டுள்ளார்கள்.

இவ்வாறான ஒரு அரசியல் காய் நகர்த்தல்களே இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் அரசியல் முதலாளித்துவ அரசியல்வாதிகள் கையில் எடுத்துக் கொண்ட ஆயுதமாக விளங்கியது. இதனால் தான் இலங்கையில் சுதந்திரத்திற்கு முன்னர் உழைக்கும் மக்கள் என்ற ஒரே வர்க்கமாக தங்கள் உரிமைகளுக்காக போராடியவர்கள் பின்னாளில் மொழிசார்ந்தும் மதம் சார்ந்தும் பிரித்தாளப்பட்டார்கள். இதன்" விளைவாக இலங்கையில் இனவாதம் இருப்பக்கங்களிலும் பிரயோகிக்கப்பட நடுத்தர மற்றும் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இவ்வாறான திட்டமிட்ட பிரித்தாளும் தந்திரத்திரத்தில் முக்கியமானவர்களாக விளங்கிய டி. எஸ் சேனநாயக்க மற்றும் எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்க அடங்கிய பல சிங்கள தேசிய அரசியல்வாதிகளோடு தமிழ் அரசியல்வாதிகளும் கைகோர்த்து நின்றார்கள் என்பதை சாதாரண தமிழ் மற்றும் சிங்கள மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இதனால் அவர்களும் இனவாதச் சேற்றில் அள்ளுண்டு செல்லவேண்டியவர்களாக ஆக்கப்பட்டார்கள்.

இவ்வாறாக இயற்கை வளங்களையும் சாதகமான கால நிலையையும் கொண்ட இலங்கைத்தீவில் அமைதி இன்மை ஏற்பட இனவாதம் காரணமாக விளங்கியது. பெரும்பான்மை இன சிங்கள மக்களை திருப்திப் படுத்தும் வகையில் சிங்களத் தலைவர்களின் தலைமையில் இயங்கிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி பதவிக்கு வந்து மாணவர்களின் பல்கலைக் கழக பிரவேசத்தில் தரப்படுத்தலை அறிமுகம் செய்தது. இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் சாத்வீகப் போராட்டங்களை ஆரம்பித்தார்கள். குறிப்பாக தமிழ் மாணவர் பேரவை" போன்ற மாணவர்களின அமைப்புக்கள் போராட்டங்களை நடத்துவதற்காக மாணவர்களையும் பொது மக்களையும் ஒன்று திரட்டினார்கள். அப்போது அந்தப் போராட்டங்களை அடக்கும் வகையில் மாணவர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் கைதுகள் ஆகியவற்றைச் செய்ய இலங்கைப் பொலிசாருக்கு அரசாங்கங்கள் அழுத்தங்கள் கொடுக்கத் தொடங்கின. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தான் மாணவர் அமைப்புக்களின் பிரதிநிதிகளா டேவிற்சன் மற்றும் பொன் சிவகுமாரன் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இவ்வாறான மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் போராட்டங்களே பின்னாளில் ஆயுதங்கள் ஏந்திய போராட்டங்களாகவும் தாக்குதல்ககளாகவும் மாற்றம் பெற்றன. இந்த மாற்றங்களை தமிழ் மக்களும் வரவேற்று தங்கள் ஆதரவை வழங்கினார்கள். தமிழ் மக்களுக்காக விடுதலையைப் பெற்றுக்கொள்ள் "ஆயுதப் போராட்டம்" ஒன்றே உகந்தது என்பதை மக்களும் மாணவர்களும் இளைஞர்களும் ஏற்றுக்கொணடார்கள்.

இந்த போராட்ட வடிவத்தின் வளர்ச்சியானது 1983ம் ஆண்டு தலைவர் பிரபாகரன் அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் நடத்தப்பெற்ற தாக்குதலில் 23 இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட இந்த சம்பவம் சிங்கள அரசியல்வாதிகள் பலரையும் சில தமிழ் அரசியல்வாதிகளையும் அதிரச் செய்தது. சிங்கள இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டதற்கு இனவாத சாயம் பூசப்பட்டு பின்னர் அது இனக்கலவரமாக வெடித்தது. அந்தக் காலப்பகுதியில் சுமார் ஒரு வார காலத்திற்கு இலங்கை எங்கும் நடத்தப்பெற்ற இனவாதக் கொலைகளே இன்றும் நாம் 43 வது ஆண்டாக நினைவு கூர்கின்ற ஒரு துயரங்கள் நிறைந்த நினைவுகளாக எம்மோடு பயணிக்கின்றது. பின்னரும் தொடர்ச்சியாக நடைபெற்ற இனப்படுகொலைகளுக்கு இரையாகிப் போன எம் உறவுகளை நாம் உருக்கத்துடன் நினைவு கூறும் இந்த யூலைப்படுகொலை அனுஸ்டிப்பை நாம் அனைவரும் உணர்வுகளைப் பகிர்ந்து கடந்து செல்வோம்!

JJ Rental
கதிரை மேசை வாடகைக்கு
416.553.1540 | 647.960.1415



உங்கள் வீட்டு வைபவங்களுக்குத் தேவையான கதிரைகள், மேசைகள், பார்க் ஒன்றுகூடலுக்கு வேண்டிய கதிரைகள், மேசைகள், TENTS, BBQ மிஷின் GAS அடுப்புகள் அனைத்தும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
416.553.1540 | 647.960.1415

உணவகத்தில் வேலை வாய்ப்பு
ரொறன்ரோவில் உள்ள உணவகம் ஒன்றில் Dish Washer ஆக வேலை செய்ய உடனடியாக ஆண் ஒருவர் தேவை.
நல்ல சம்பளம் வழங்கப்படும். அத்துடன் வேலையில் உயரவும் வாய்ப்பு உண்டு. தொடர்புகளுக்கு: kumargurunala@gmail.com - அல்லது 647.617.0662 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

One Bedroom Basement வாடகைக்கு உண்டு
One Bedroom Basement உடனடியாக வாடகைக்கு உண்டு HWY 27 and Langstaff Road. சந்திப்பிற்கு அருகில். Woodbridge, Brampton ஆகிய இடங்களுக்கு அருகில்
மேலதிக விபரங்களுக்கு: 416 428 2141

தொழிற்சாலை ஒன்றில் உடனடி வேலை வாய்ப்புக்கள்
*மரவேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள CARPENTER
*Spray Painting செய்வதில் அனுபவத்துடன் வேலயாட்கள்
ஸ்காபுறோ நகரில் Bellamy-Progress சந்திப்புக்கு அருகில் உள்ள Doors - Windows தொழிற்சாலைக்கு மரவேலை செய்யக்கூடிய அனுபவமுள்ள CARPENTER மற்றும் Spray Painting செய்வதில் அனுபவம் உள்ள தொழிற்சாலை வேலயாட்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள்
தொடர்புகளுக்கு: 416-875-4119 என்னும் இலக்கத்தை அழைக்கவும்

இலங்கை செய்திகள் Sri Lanka News

# "நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்து மக்கள் விடயத்தில் எவ்வாறு அக்கறையுடன் இருந்தீர்களோ, அவ்வாறே ஆட்சியில் மக்கள் விடயத்தில் அக்கறையுடன் இருங்கள்

## அநுர அரசிடம் சஜித் வேண்டுகோள்



"நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்த சமயம் மக்கள் விடயத்தில் எவ்வாறு அக்கறையுடன் இருந்தீர்களோ, அப்படியே ஆட்சியில் இருக்கும்போதும் மக்கள் விடயத்தில் அக்கறையுடன் இருங்கள். இனியாவது கருணையுடன் செயற்பட்டு மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள் என இந்த அரசைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மனிதர்களைப் போலவே விலங்கினங்களையும் பாதுகாத்து, நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்குத் உடனடியாகத் தீர்வு வழங்குமாறும் அரசை அவர் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றத்தில் 06ம் திகதி அன்று வியாழக்கிழமை உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் மேலும் சுட்டிக்காட்டிய முக்கிய விடயங்கள் வருமாறு: "நுவரெலியா மாவட்டம், கொட்டகலை பகுதியில் பொறியில் சிக்கிய சிறுத்தை ஆபத்தான நிலையில் இருப்பதாகத் தகவல் கிடைத்தவுடன், கால்நடை மருத்துவத் துறையினர் தொழிற்சங்கப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த போதிலும், அவர்களிடம் பேசி ரந்தென்பெல கால்நடை மருத்துவரை அனுப்பி அந்தச் சிறுத்தையைக் காப்பாற்ற முடிந்தது. இதற்கு உதவிய கால்நடை மருத்துவர்களுக்கும் வனஜீவராசிகள் அதிகாரிகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வனஜீவராசிகள் துறையில் 33 கால்நடை மருத்துவர்கள் இருக்க வேண்டிய நிலையில் தற்போது 17 பேரே உள்ளனர். குறைந்த வருமானம், அதிக வேலைப்பளு, உயிராபத்து மற்றும் விடுமுறை, அவசரகாலக் கொடுப்பனவுகள் இன்றி அவதிப்படும் இவர்களுக்குப் பதவி உயர்வுகள் கூட வழங்கப்படுவதில்லை. இவர்களின் 24 மணி நேர அர்ப்பணிப்பு சேவையை மதித்து முறையான நீதியையும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புகளையும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

பொல்துவ சந்திப் பகுதியில் இஸ்ரேல் வேலைவாய்ப்பு விவகாரத்தால் பாதிக்கப்பட்டுள்ள தரப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அரச ஒப்பந்தத்தின் பிரகாரம் 70மூ பேரை அரசு ஊடாக அனுப்ப 4 இலட்சம் செலவாகும் நிலையில், 30% பேரைத் தனியார் மூலம் அனுப்ப 45 இலட்சம் வரை செலவாகின்றது.

பெரும்பான்மையானவர்கள் தனியார் மூலம் அனுப்பப்படுவதால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அரசும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமும் பேசி, அரசு மட்டத்தில் அனுப்பும் தொகையை அதிகரிக்க வேண்டும்.

விவசாயிகளின் அறுவடைக்கு ரூபா 120 உத்தரவாத விலை வழங்கப்படுவது போதுமானதல்ல. விவசாய அமைச்சரே ஒரு கிலோவுக்கான உற்பத்திச் செலவு ரூபா 137 எனக் கூறுகின்றார். தேர்தல் காலத்தில் ரூபா 150 உத்தரவாத விலை வழங்கப்படுமெனக் கூறிய போதிலும், இன்று அது நடைமுறையில் இல்லை. எனவே, விவசாயிகளுக்கு முறையான உத்தரவாத விலையைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

தொடர்ச்சியான பேரிடர்களை எதிர்கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் கடன் செலுத்தாதோர் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் சொத்துகள் ஏலமிடப்படும் அபாயமும் எழுந்துள்ளது. எனவே, அவர்களின் கடன்களை மறுசீரமைத்து நிவாரணங்களை வழங்குங்கள்." - என்றார்.

# செம்மணி மனிதப் புதைகுழியில் எழுந்தமானமாக் குழிகளை வெட்டி ஆய்வு செய்ய நீதிமன்றம் அனுமதி



**- ந.லோகதயாளன்**

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாய்வுத் தளத்தில் ஜி.பி.ஆர். ஸ்கான் செய்யப்பட்ட பகுதிகளில் முழுமையான அகழ்வுப் பணிகள் நிறைவுறாத நிலையில், எதிர்வரும் நாள்களில் எழுந்தமானமாக குழிகளை வெட்டி ஆய்வு செய்யுமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் இடைக்காலக் கட்டளை பிறப்பித்துள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பரிசோதனைகள் தொடர்பான நிர்வாக ரீதியான கலந்துரையாடல் மற்றும் திறந்த நீதிமன்ற அமர்வு, நீதிவான் எஸ்.லெனின்குமார் தலைமையில் செம்மணி அகழ்வாய்வுத் தளத்தில் 5ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்த அமர்வில் குற்றப் புலனாய்வுப் பிரிவினருடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா, சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் செல்லையா, காணாமல்போனோர் குடும்பங்கள் மற்றும் ஓ.எம்.பி. சார்பிலான சட்டத்தரணிகள் மற்றும் யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

நீதிமன்றத்தில்
முன்வைக்கப்பட்ட
முக்கிய சமர்ப்பணங்கள்

01. தொல்லியல் அறிக்கை: தற்போதைய அகழ்வுப் பணிகள் மற்றும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா மன்றுக்கு சமர்ப்பித்ததுடன், அகழ்ந்தெடுக்கப்பட்ட பெரும்பாலான என்புத் தொகுதிகளில் துப்பாக்கிச் சன்னம் துளைத்தது போன்ற அடையாளங்கள் இல்லை எனவும் நிபுணர்களால் தெரிவிக்கப்பட்டது.

02. எல்லைகளைத் தாண்டிய ஆய்வு: செம்மணி மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட சித்துப்பாத்தி இந்து மயானத்தின் தற்போதைய எல்லைச் சுவர்களுக்கு அப்பால், செய்மதிப் புகைப்படங்களை ஆதாரமாகக் கொண்டு ஸ்கான் மற்றும் அகழ்வுப் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என சட்டத்தரணி க.சுகாஷ் சமர்ப்பணம் செய்தார்.

03. காலத்தை நிர்ணயிக்கும் பரிசோதனை: அகழ்ந்தெடுக்கப்படும் என்புத் தொகுதிகளுக்குக் காபன் - 14 பரிசோதனை மாத்திரமின்றி, தடயவியல் பொருள்களையும் அடிப்படையாகக் கொண்டு காலத்தை நிர்ணயிக்கும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் ஆணையாளர் சட்டத்தரணி மீராக் ரஹீம் மற்றும் சட்டத்தரணி குமரவடிவேல் குருபரன் ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர்.

04. நான்காம் கட்ட அகழ்வு: எழுந்தமானமாகக் குழிகளைத் தோண்டும்போது என்புத் தொகுதிகள் ஏதேனும் அடையாளம் காணப்பட்டால், அடுத்த கட்டமாக 4 வாரங்கள் வரை அகழ்வுப் பணிகளைத் தொடரத் தயாராக இருப்பதாக நிபுணர்கள் மன்றில் தெரிவித்தனர்.

சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்களை ஆராய்ந்த நீதிவான், ஸ்கேன் செய்யப்பட்டு முழுமையாக ஆய்வு செய்யப்படாத பகுதிகளில் எழுந்தமானமாகக் குழிகளைத் தோண்டி ஆய்வு செய்யவும், தடயப் பொருள்கள் காணப்பட்டால் தொடர்ச்சியாக முழுமையான ஆய்வுகளை மேற்கொள்ளவும் உத்தரவிட்டார்.

அத்துடன், யாழ். பல்கலைக்கழக ஆய்வு அறிக்கைகள் மற்றும் சமர்ப்பிக்கப்படாத ஏனைய அறிக்கைகளையும் மன்றில் தாக்கல் செய்யுமாறு கட்டளையிடப்பட்டது.

ஜி.பி.ஆர். ஸ்கான் பரிசோதனை அறிக்கை மற்றும் சான்றுப் பொருள்கள் தொடர்பான அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டு, கார்பன் - 14 பரிசோதனை குறித்த இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கான அடுத்த கட்ட வழக்கு விசாரணை எதிர்வரும் 14ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் ஆகஸ்ட் 15 அன்று நடைபெறவுள்ள சர்வதேச சைவ மாநாடு!

**- ந.லோகதயாளன்**

தமிழரின் ஆன்மீக மரபையும் பண்பாட்டு அடையாளத்தையும் பிரதிபலிக்கும் சைவ நெறி மற்றும் தமிழ்மொழியைப் பாதுகாக்கும் நோக்கில், எதிர்வரும் 15ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சர்வதேச சைவ மாநாடு நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் 5ம் திகதி புதன்கிழமை அ ன்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே ஏற்பாட்டுக் குழுவினர் இந்த அறிவிப்பை வெளியிட்டனர்.

இந்த மாநாடு யாழ்ப்பாணம் நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை இடம்பெறவுள்ளது.

நீண்டகால யுத்தம், கட்டாய இடப்பெயர்வு மற்றும் புலம்பெயர்வு காரணமாகச் சமூகத்தின் சமய விழுமியங்களும் வாழ்வியல் பெறுமதிகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றை மீட்டெடுக்கும் நோக்குடனும், தற்போதைய சமூகச் சூழலில் அதிகரித்து வரும் நம்பிக்கையின்மை, போதைப்பொருள் பாவனை, ஊழல் மற்றும் பல்வேறு துஷ்பிரயோகங்களிலிருந்து மக்களை மீட்டெடுத்து ஆன்மிக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடனும், பல கோயில்கள் கட்டப்பட்டு வந்தாலும், சைவத்தின் அடிப்படைத் தத்துவங்களும் பண்பாட்டு விழுமியங்களும் இளைய தலைமுறையினரிடையே மங்கிவரும் நிலையைப் போக்கி, உண்மையான ஆன்மீக வாழ்வியலை வலுப்படுத்தி சமூக மறுமலர்ச்சியை உருவாக்கும் நோக்குடனும் இந்தச் சர்வதேச சைவ மாநாடு நடைபெறவுள்ளது என்று ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்த அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பும் அவசியம் என்று குறிப்பிட்ட ஏற்பாட்டுக் குழுவினர், அறிஞர்கள், சமயப் பெரியோர்கள் மற்றும் பல்துறை நிபுணர்கள் தங்களது ஆலோசனைகளையும் ஆசிச் செய்திகளையும் வழங்குமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

அதேவேளை, மாநாட்டு ஏற்பாடுகளைச் சிறப்பாக முன்னெடுக்க உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வாழும் நல்லுள்ளங்கள் தாராளமாக நிதியுதவி வழங்கி இந்த முயற்சியில் பங்கெடுக்குமாறும் ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News



# கடந்த அரசாங்கங்கள் தமிழர்களுக்கு எதைச் செய்தார்களே அதையே தற்போதைய அரசாங்கமும் செய்கின்றது

## வசாவிளான் போராட்டத்தில் தவிசாளர் நிரோஷ்

ராஜபக்சாக்கள் தமிழர்கள் விடயத்தில் எதைச் செய்தார்களே அதையே அநுர அசாங்கமும் தமிழர்களுக்குச் செய்கின்றது என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

வலிகாமம் வடக்கு வசாவிளான் மக்கள் தமது மீள் குடியேற்றத்தினை வலியுறுத்தி ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தின் முதல் நாள் போராட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தொவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும், மக்களின் நிலங்கள் மக்களுக்கே சொந்தம் என ஆட்சிக்கு வந்த அரசாங்கம் மக்களின் உரிமைகளை ஏற்க மறுக்கின்றது. இப்போது ஆட்சியில் இருப்பவர்களும் கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த ராஜபக்சாக்களையோ அல்லது மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஏனைய அரசாங்களையோ ஒத்ததாக தாங்களும் சளைத்தவர்கள் இல்லை என்பதை வெளிப்படுத்தி வருகின்றது.

வசாவிளானில் அமையப் பெறும் இராணுவ வைத்திய சாலை பொதுமக்களின் காணிகளை இராணுவ அதிகாரங்களை பயன்படுத்தி அங்கு வாழ்ந்த பூர்வீக கிராம மக்களை வலோத்காரமாக வெளியேற்றி விட்டு அந்த மக்கள் வீடற்றவர்களாக முகாம்களில் வசிக்கும் போது ஆக்கிரமித்து கட்டப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் தற்பொது அமைக்கப்பட்டு வரும் சட்டங்கள், ஒழுங்கு விதிகளுக்க புறம்பான இந் இராணுவ வைத்தியசாலையை அகற்ற வேண்டும் என மாவட்ட அபிவிருத்திக்குழுவில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தினை நானே வழிமொழிந்தேன். அவ்விடயம் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அறிக்கையிலும் எனது பெயரை கோடிட்டுக்காட்டி சகல திணைக்களங்களுக்கும் அனுப்பப் பட்டது.

ஆனால் போயா தினங்களில் கூட அங்கு வீரியமான முறையில் கட்டிடம் அமைக்கப்படுகின்றது. ஆகவே இங்கே நடப்பவற்றை பார்க்கும் போது சொல்லலவில் அரசாங்கம் பலவற்றை பேசினாலும் செயலளவில் ராஜபக்சாக்களை ஒத்ததாகவே இருக்கின்றது. நாட்டில் இலஞ்சத்தினையும் ஊழலையும் ஒழிக்கின்றார்கள் அதனை நாம் வரவேற்கின்றோம். ஒரு இனத்தின் மீது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட அரச அராஜகள், படுகொலைகள், இராணுவ மயமாக்கம் பற்றி நடவடிக்கை எடுக்கின்றீர்கள் இல்லை. காரணம் இந் நாட்டில் தமிழர்கள் என்றால் எதையும் செய்ய முடியும் என்ற சிங்கள பேரினவாத மனநிலை இன்றைய ஆட்சியாளர்களின் உள்ளங்களுக்குள்ளும் உள்ளதா எனக் கேள்வி எழுப்புகின்றோம்.



# யாழ் மாவட்ட கலாச்சாரப் பேரவை வருடாந்தம் வழங்கும் "செம்புலக் குரிசில்" விருதை பெற்ற கனடா வாழ் எழுத்தாளரும் சமூகப் பணியாளருமான அருண் செல்லப்பா




யாழ் மாவட்ட கலாச்சாரப் பேரவையினால் வருடாந்தம் வழங்கப் பெறும் "செம்புலக் குரிசில்" விருதை வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற கனடா வாழ் எழுத்தாளரும் சமூகப் பணியாளருமான அருண் செல்லப்பா அவர்களுக்கு கனடாவிலிருந்து வாழ்த்துக்கள் குவிந்த வண்ணம் உள்ளன "செம்புலக் குரிசில்" விருது என்பது யாழ் மாவட்ட கலாசாரப் பேரவையினால் தமிழ் இலக்கியம் மற்றும் பண்பாட்டுத் துறை சார்ந்த சாதனையாளர்களுக்கு வழங்கப்படும் ஒரு சிறப்புக் கௌரவ விருதாகும். கடந்த பல வருடங்களாக வழங்கிக் கௌரவிக்கப்பெறும் வாய்ப்பை பலர் பெற்று மகிழ்ந்திருக்கின்றார்கள்.

இந்த வகையில் கனடா வாழ் எழுத்தாளரும் சமூகப் பணியாளரும் முன்னாள் வர்த்தகத்துறை வெற்றியாளருமான அருண் செல்லப்பா அவர்கள் எழுதிய நான்கு நாவல்களுக்குமாக இன்று "செம்புலக் குரிசில்" விருது, யாழ் மாவட்ட கலாசாரப் பிரிவினரால் வைபவ ரீதியாக அவருக்கு வழங்கப்பெற்றது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் யாழ்ப்பாணத்தில் வாழும் பத்துக்கு மேற்பட்ட வெற்றியாளர்களோடு கனடாவில் வாழ்ந்தாலும் தாயகத்திலும் சமூகப் பணிகளிலும் ஈடுபாடு கொண்ட அவருக்கு இந்த கௌரவம் கிட்டியுள்ளது.

"செம்புலக் குரிசில்" விருதானது சொந்த மண்ணில், பண்பாட்டுத் துறை அவரது எழுத்திற்குத் தரும் மிக உயர்ந்த அங்கீகாரம் என்றும் அவரது படைப்புக்கள் தந்த தாய் மண் சுகந்தமே அவரது படைப்புக்களுக்கு விருதுகளைப் பெற்றுக் கொடுத்துள்ளது என யாழ்ப்பாணத்திலிருந்து உதயன் செய்தியாளர் அறிவித்துள்ளார்.



கனடிய செய்திகள்
Canadian News

# கல்விச் செல்வத்தை அளித்த தாயான புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்திற்கு வாழ்த்துக்களும் நன்றியும் தெரிவிக்கும் பழைய மாணவர் கனடா வாழ் தணிநாயகம் அவர்கள்




நீண்ட காலமாக கனடாவில் வாழ்ந்த வண்ணம் வர்த்தகத்துறையில் கால் பதித்து அதில் ஒரு வெற்றியாளனாகத் திகழுவதோடு மாத்திரமன்றி. தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் நன்மை பயக்கும் செயற்பாடுகளுக்கு தனது ஆதரவை தொடர்ச்சியாக வழங்கிவரும் தணிநாயகம் சண்முகநாதன் அவர்கள் இங்கு காணப்படும் வாழ்த்துக் கவிதையை தான் கற்ற தாயகப் பாடசாலைக்கு நன்றியும் வாழ்த்துக்களும் தெரிவிக்கும் வகையில் பிரசுரம் செய்துள்ளார்.

தனக்கு கல்விச் செல்வத்தை அள்ளித் தந்த தாயான புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம் ஸ்தாபிக்கப்பெற்று நூறு ஆண்டை அடைவதை முன்னிட்டு 05-08-2026 அன்று பாடசாலை வளாகத்தில் பெரு விழாவொன்றை பாடசாலை பழைய மாணவர்கள் நடத்துகின்றார்கள்.

அந்த வரலாற்றுப் புகழ்மிக்க கொண்டாட்டத்திற்கு கனடாவிலிருந்து வாழ்த்துக்களும் நன்றியும் தெரிவிக்கும் பழைய மாணவர் தணிநாயகம் அவர்கள் கனடா வாழ் தமிழ் மக்களின் நலன்களிலும் அக்கறை கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

*- UTHAYAN LJI Journalist Ganesh -*




## Candidate for Toronto City Council-Ward 20-Scarborough Southwest, SHARMINA NASRIN'S Campaign Team hosted a Fundraising Event

# ரொறன்ரோ நகரசபை – ஸ்காபுறோ தென்மேற்கு – 20ம் வட்டாரத்திற்கான வேட்பாளர் சர்மினா நசீரின் பிரச்சாரக்குழு நடத்திய நிதிசேர் நிகழ்வு

மிக விரைவில் நடைபெறவுள்ளரொறன்ரோ நகரசபைக்கான தேர்தலில் - ஸ்காபுறோ தென்மேற்கு - 20ம் வட்டாரத்திற்கான வேட்பாளராகப் போட்டியிடும் திருமதி சர்மினா நசீரின் பிரச்சாரக்குழு நடத்திய நிதிசேர் நிகழ்வு கடந்த 31-07-2026 வெள்ளிக்கிழமையன்று மாலை ஸ்காபுறோவில் நடைபெற்றது.

பல்வேறு இனங்கள் சார்ந்த வெவ்வேறு மொழிகள் பேசுவோர்களாக சுமார் 100 பார்வையாளர்களும் நன்கொடையாளர்களும் அங்கு கலந்து கொண்டார்கள். அங்கு தமிழ் பேசும் அன்பர்களான சமூக சேவையாளர் விசு கணபதிப்பிள்ளை, "யுகம்" வானொலி கணபதி ரவீந்திரன், நகைக் கடை உரிமையாளர் சபாரத்தினம். "உதயன்" லோகேந்திரலிங்கம் உட்பட சில தமிழ் பேசும் அன்பர்களும் கனடிய மற்றும் பங்காளதேஸ் - பாகிஸ்த்தான் ஆகிய இனக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் சபையை அலங்கரிததார்கள்.








வெவ்வேறு சமூகங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் சிலர் அங்கு உரைகளை ஆற்றினார்கள்.

நகரசபைத் தேரதலில் போட்டியிடும் (SHARMINA NASRIN) சர்மினா நசீரின் அங்கு உரையாற்றுகையில் தனது சமூகம் சார்ந்த மற்றும் குடும்பம் சார்ந்த சில சவால்களை தான் எதிர்கொண்ட நாட்களில் அவற்றிற்கான தீர்வைக் காணவேண்டும் என்ற ஆர்வத்தோடுதான் அரசியல் ஈடுபட வேண்டும் என்றும் தேர்தல்களில் போட்டியிடுவதன் மூலம் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்று எண்ணி முதலில் சில சமூகப் பணிகளில் ஈடுபடத் தொடங்கினேன். அவ்வாறே எனது அரசியல் மற்றும் சமூகம் சார்ந்த பயணம் ஆரம்பித்தது என்று கூறினார்.

அன்றைய தினம் பல இளம் மாணவர்கள் வேட்பாளர் சர்மினா அவர்களின் தேர்தல் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட தங்களை இணைத்துக் கொண்டார்கள். வேட்பாளர் சர்மினாவை வாழ்த்த விரும்புகின்றவர்கள் (437) 228-8548 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

*- Uthayan LJI Journalist Arjune -*

# கனடாவில் இயங்கிவரும் "ஓந்தாச்சிமடம் மக்கள் – கனடா ஒன்றியம்" நடத்திய "கோடைகால ஒன்றுகூடல்" குதூகலமாக கொண்டாடப்பெற்றது!




எமது தாய்த் தமிழ் மண்ணின் கிழக்கில் ஒரு அற்புதப் புள்ளியாய் விளங்கும் "ஓந்தாச்சிமடம் கிராமத்தை பிறப்பிடமாகவும் புகுந்த இடமாகவும் கொண்டு கனடாவில் வாழ்ந்து வரும் அன்பர்களால் ஆரம்பிக்கப்பெற்று இங்கு இயங்கிவரும் "ஓந்தாச்சிமடம் மக்கள்-கனடா ஒன்றியம்" நடத்திய "கோடைகால ஒன்றுகூடல்" 2026" முழுநாள் நிகழ்வு 03-08-2026 அன்று திங்கட்கிழமை குதூகலமாக கொண்டாடப்பெற்றது!

ஸ்காபுறோ மற்றும் மார்க்கம் நகரங்களுக்கு எல்லைக்கோடாக விளங்கும் பூங்காவில் நடைபெற்ற இந்த அற்புதமான கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட அன்பர்கள் அனைவரும் ஏற்பாட்டாளர்களது விருந்தோம்பலை உற்சாகமாக அனுபவித்தனர்.

விளையாட்டுப் போட்டிகள் மற்றும் சிறுவர் சிறுமியர்களுக்கான போட்டிகள் மற்றும் பொழுது போக்கு நிகழ்வுகள் என அனைத்து சிறந்த முறையில் ஏற்பாடு செய்யப்பெற்று பரிசுகளும் பாராட்டுப் பத்திரங்களும் வழங்கப்பெற்றன. இந்த அற்புதமான முழுநாள் ஒன்றுகூடலை சிறப்பாக நடத்த "ஓந்தாச்சிமடம் மக்கள்-கனடா ஒன்றியம்" அமைப்பின் தலைவர்: மார்கண்டுலிங்கம் ரகு, செயலாளர்: மாணிக்கவாசகம் விஜிதரன், பொருளாளர்: செல்வரெத்தினம்: ஜசிகுமார் உட்பட அனைத்து உறுப்பினர்களும் நண்பர்களும் தங்கள் பங்களிப்பையும் நேரத்தையும் அர்ப்பணித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மதிய உணவு உட்பட சுவையான சிற்றுண்டிகள் மற்றும் பானங்கள் என அனைத்தையும் ரசித்து சுவைத்து கிழக்கின் அடையாளமாகத் திகழும் "விருந்தோம்பலை" அன்றைய தினம் அங்கு கலந்து கொண்ட நண்பர்கள் பலர் அனுபவித்தும் பாராட்டியும் சென்றார்கள் என்றால் அது மிகையாகாது.

*- Uthayan LJI Journalist Arjune -*








# ஒன்ராறியோ அரசு சென்டினரி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் விரிவாக்கத்திற்காக 82 மில்லியன் டொலர் ஒதுக்கீடு செய்கிறது

கடந்த செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 4 அன்று, ஸ்காபரோ ரூஜ் பார்க் சட்டமன்ற உறுப்பினரும் சுகாதார இணை அமைச்சருமான விஜய் தணிகாசலம் அவர்கள், துணை முதல்வரும் சுகாதார அமைச்சருமான சில்வியா ஜோன்ஸ் மற்றும் ஸ்காபரோ சட்டமன்ற உறுப்பினர்கள் ரேமண்ட் சோ, டேவிட் ஸ்மித் ஆகியோருடன் இணைந்து, ஸ்காபரோ சுகாதார வலையமைப்பின் சென்டினரி மருத்துவமனையில் புதிய மற்றும் விரிவாக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டுமானப் பணிகளை அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைத்தார்.

ஒன்ராறியோ அரசின் 82 மில்லியன் டொலருக்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டின் ஆதரவுடன் அமைக்கப்படும் இந்த புதிய அவசர சிகிச்சைப் பிரிவு, தற்போதைய அவசர சிகிச்சைப் பிரிவை விட 36,000 சதுர அடிக்கும் அதிகமான அளவிற்கு விரிவுபடுத்தப்படவுள்ளது. இதன் மூலம் வேகமாக வளர்ந்து வரும் ஸ்காபரோ மக்கள் தொகைக்கு விரைவானதும் வசதிகள் நிறைந்ததுமான மற்றும் உயர்தர அவசர மருத்துவ சேவைகளை அவர்களின் வீட்டிற்கு அருகிலேயே வழங்குவதற்கான திறன் அதிகரிக்கப்படுவதுடன், இப்பகுதியில் சுமார் 400 நல்ல ஊதியமுள்ள வேலைவாய்ப்புகளும் அதிகரிக்கும் வாய்ப்பும் உருவாகின்றது.

"ஸ்காபரோ பிரதேசமானது. தொடர்ந்து வளர்ந்து வரும் நிலையில், எமது சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்ப சுகாதார சேவைகளையும் உட்கட்டமைப்பையும் விரிவுபடுத்துவது மிகவும் முக்கியமானது. சென்டினரி மருத்துவமனையின் இந்த புதிய மற்றும் விரிவாக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவு, குடும்பங்கள் அவர்களுக்கு தேவையான நேரத்தில், வீட்டிற்கு அருகிலேயே விரைவான மற்றும் உயர்தர சிகிச்சையைப் பெற உதவும். ஸ்காபரோ மக்களுக்காக இந்த முக்கியமான முதலீட்டை முன்னெடுப்பதில் நான் பெருமையடைகிறேன்," என சுகாதார இணை அமைச்சர் விஜய் தணிகாசலம் அவர்கள் தெரிவித்தார்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க விரிவாக்கத்தின் மூலம், ஸ்காபரோ குடும்பங்களுக்கு தலைமுறைகள் கடந்தும் தேவையான உயர்தர மருத்துவ சேவைகளை அவர்களின் சமூகத்திற்கு அருகிலேயே வழங்கும் வலுவான மற்றும் நவீன சுகாதார அமைப்பை உருவாக் குவதில் ஒன்ராறியோ அரசு தொடர்ந்து முன்னேறி வருகிறது என்றும் அங்கு உரையாற்றிய அனைவரும் தெரிவித்தனர்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து தவறான புரிதல்கள் ஏற்படாதவாறு கவனம் செலுத்துமாறு சுமந்திரன் போன்றவர்களிடம் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி அநுர





தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் கூட்டணி என்னும் பெயரில் மக்களால் புறக்கணிப் பட்டுள்ள கட்சிகளின் தலைவர்கள் என்று குறிப்பிட்டப் படுகின்றவர்களில் சிலர் பாலியல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டவர்கள் என்பது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு நன்கு தெரிந்திருந்தும் அவர் 3ம் திகதி திங்கட்கிழமையன்று காலை ஜனாதிபதி செயலகத்தில் அவர்களைச் சந்தித்தார். அவர்களில் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் சந்திரகுமார் போன்றவர்களும் அடங்கியிருந்ததை ஊடகவியலாளர்கள் ஏளனத்தோடு கவனித்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. எனினும் குறிப்பிடத்தக்க தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை என்று செய்தியாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

வழமை போல கருத்துப் பரிமாற்றங்களை அடுத்து வாய்மொழி மூல உறுதிமொழிகள் சிலவற்றுடன் கூட்டம் முடிவுக்கு வந்தது எனச் சந்திப்பு பற்றிய செய்திகளைச் சேகரித்துள்ள ஊடகவியலாளர்கள் சிலர் தெரிவித்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஆகிய கட்சிகளைச் சார்ந்தவர்களும் ஜனாதிபதியை அவரது செயலகத்தில் சந்தித்துப் பேசினர்.

வழமை போல் புதிய அரசமைப்பு திருத்தத்துக்கான நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி கூறினார்.

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் சொந்தக் காணிகள் அவர்களுக்கு விடுவிக்கப்பட வேண்டும் என்ற அரசின் கொள்கை நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை என்று கூறிய ஜனாதிபதி, இராணுவத்தின் கைவசம் உள்ள அத்தகைய காணிகளை விடுவிப்பதில் என்ன நெருக்கடி என்பது குறித்து இராணுவத்திடம் தாம் அறிக்கை கோரியிருக்கின்றார் என்றும் அது கிடைத்ததும் அவ்விடயம் குறித்து முடிவு செய்யப்படும் என்றும் அவர் சொன்னார்.

மலையக மக்களுக்கு காணிகளைப் பகிர்ந்து அளிப்பதில் சில நெருக்கடிகள் இருக்கின்றன என்று சொன்ன ஜனாதிபதி, மலையகத் தோட்டங்களை நிர்வகிக்கும் கம்பனிகள் இவற்றில் இறுக்கமான நிலைப்பாட்டில் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்.

மாகாண சபைத் தேர்தலை என்ன முறைமையில் நடத்துவது என்பது தொடர்பில் நிறுவப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முடிவு கிடைத்ததும் தேர்தல் நடத்தப்படும் என்றார் ஜனாதிபதி.

இந்தத் தெரிவுக்குழுவின் செயற்பாட்டில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும், இது காலத்தை இழுத்தடிக்கும் வேலை என்றும் கட்சிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் ஒரே குரலில் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்புக் குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலக முன்றிலில் வைத்து ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு: "தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் குழுவாக ஜனாதிபதியைச் சந்தித்து, அம்மக்கள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகள் குறித்து விரிவான பேச்சுகளை நடத்தினர்.

இந்தச் சந்திப்பின் போது புதிய அரசமைப்பைக் கொண்டுவருவது தொடர்பான வாக்குறுதிகள் சுட்டிக்காட்டப்பட்டன. அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, சிறிய தாமதம் ஏற்பட்ட போதிலும் விரைவில் அதற்கான பணிகள் தொடங்கப்படும் என உறுதியளித்தார்.

அத்துடன், மாகாண சபைத் தேர்தல் இதுவரை நடத்தப்படாமை குறித்து கேள்வி எழுப்பியபோது, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை வந்த பின்னரே முடிவெடுக்கப்படும் என ஜனாதிபதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அந்தத் தெரிவுக்குழுவின் மீது தமக்கு நம்பிக்கை இல்லை என்றும், தேர்தலைத் தள்ளிப்போடுவதற்கே அது பயன்படுத்தப்படுவதாகவும் நாங்கள் சுட்டிக்காட்டினோம்.

இதனையடுத்து, தெரிவுக்குழுவின் தலைவருடன் இது குறித்து நேரடியாக ஆலோசித்து உரிய தீர்வை வழங்குவார் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

மேலும், பொதுமக்கள் மற்றும் தனியாருக்குச் சொந்தமான நிலங்கள் இராணுவத்தினராலும் ஏனைய அரசு நிறுவனங்களினாலும் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளமை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

கொள்கை ரீதியாக அந்த நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதில் அரசு உடன்பட்டிருந்தாலும், நடைமுறையில் தாமதம் நிலவுவது குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டது. நிலங்களை விடுவிப்பதில் உள்ள தடைகள் குறித்து இராணுவத்திடம் அறிக்கை கோரப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கூறினார்.

இவற்றுடன், மலையக மக்களுக்குச் சொந்தமான காணி உரிமை இன்னமும் கிடைக்கப் பெறாத நிலைமை குறித்தும், தோட்ட நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களை மீட்டு மக்களுக்கு வழங்குவது தொடர்பிலும் பேசப்பட்ட போதிலும், அதற்கான முறையான பதில்களோ தீர்வுகளோ இன்னமும் எட்டப்படவில்லை." - என்று எம். ஏ. சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் இணைந்து உருவாக்கிய கூட்டணியின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு, இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, முழுமையான அரசியலமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவருதல், மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்தும் அது தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்கள் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் மலையக சமூகம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் குறித்த பிரதிநிதிகள் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இதன்போது விசேடமாகக் கலந்துரையாடப்பட்டதுடன், மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது எனவும், எழுந்துள்ள சிக்கல்கள் தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாட எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தற்போதைய அரசின் தேர்தல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள புதிய அரசமைப்புக்கான முன்மொழிவுகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், குறித்த பணியை அவசரமாகச் செய்ய முடியாது எனவும், பல்வேறு சமூகங்களுக்கு இடையே உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளக்கூடிய சமூகப் பரிசீலனையாக அது குறித்துக் கவனம் செலுத்துவது முக்கியம் எனவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் சுட்டிக்காட்டினார். இது 1948, 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்புகளைப் போன்று, ஒரு தரப்பினரால் மாத்திரம் அறிமுகப்படுத்தப்படும் அரசமைப்பாக இருக்கக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அரசமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பதுடன், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு எனக் குறிப்பிட்டார். எனினும், இந்தச் சந்தர்ப்பத்தில் அவசரமாகக் கொண்டுவரப்படும் அரசமைப்புத் திருத்தத்தை விட, புதிய மக்கள் ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக் கொள்வதே அவசியமாகும் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்கான கருத்தாடலைத் தொடங்குவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

பல்வேறு சமூகப் பிரிவினரும் தமது தேவைகளுக்காக மாத்திரம் செயற்படுவதைத் தாண்டி, இலங்கையர்களாக ஒன்றிணைந்து செயற்படும் நாட்டை உருவாக்கும் அடித்தளம் தற்போதைய அரசின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, கடந்த காலத்தில் நாட்டில் எந்தவொரு இனவாத மோதல்களும் இடம்பெறவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார். நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறும் முறையான ஆட்சி முறைமையே தனது எதிர்பார்ப்பு எனவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

எந்தவொரு மக்களும் வசிக்காத மலையகப் பிரதேசங்களில் கூட நில வெடிப்புகள் பதிவாகியுள்ளதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்கேற்ப மத்திய மலையகத்தின் நிலையான தன்மையை உறுதிப்படுத்தும் வகையிலேயே அந்த சிக்கலுக்கான தீர்வு காணப்பட வேண்டும் எனவும், அதற்காகத் தற்போது தனி அதிகாரசபையொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். அத்தகைய நடவடிக்கைகளின் ஊடாக மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவது அரசின் எதிர்பார்ப்பாகும் எனவும் ஜனாதிபதி இங்கு தெரிவித்தார்.

வெவ்வேறு காலப்பகுதிகளில் வெவ்வேறு தேவைகளின் அடிப்படையில் தோட்டக் கம்பனிகளுடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும், 2042 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்த ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்றும் மேலும் குறிப்பிட்ட ஜனாதிபதி, அதன்படி, வெகுவிரைவில் நிறுவனங்களுடன் புதிய ஒப்பந்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளமையால், மலையக மக்களுக்கு நிலத்துக்கான சட்டபூர்வ உரிமையை வழங்குவது தொடர்பான சரத்துகளை அதில் உள்வாங்க எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இந்திய உதவியின் கீழ் மலையக மக்களுக்காக நடைமுறைப் படுத்தப்படும் வீட்டுத் திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப் பட்டதுடன், அந்த மக்களுக்கு வீட்டுரிமை கிடைத்த போதிலும், நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களைச் செலுத்துவது உள்ளிட்ட வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் அவர்கள் பல நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்வதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஜீவன் தொண்டமான் சுட்டிக்காட்டினார்.

அந்த மக்களுக்கு பொருளாதார நிவாரணம் வழங்குவதற்காக தொண்டமான் அமைப்பையும் நெவிடா அமைப்பையும் இணைத்து புதிய வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு ஏற்கனவே முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சுக்காக இவ்வருடம் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை விட அதிகமான தொகையை 2027 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கு மற்றும் மத்திய மலைநாட்டில் நிலவும் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மக்களின் காணிகள் மக்களுக்கே சொந்தமாக வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடு என்றும், ஆணைக்குழுக்களை நியமிப்பது உள்ளிட்ட அதற்கான பல சாதகமான நடவடிக்கைகள் இதுவரையில் எடுக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், போரினால் வீடுகளை இழந்த மக்களின் நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வாக, அந்த மக்களுக்கு இரண்டு கட்டங்களின் கீழ் 13 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2027 மற்றும் 2028 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டங்களில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

டித்வா அனர்த்தம் காரணமாக வீடுகளை இழந்த மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அந்த வீடுகள் நிர்மாணிக்கப்படும் வரை தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, அந்தப் பணிகள் நிறைவடையும் வரை அந்த மக்களுக்கு வாடகை வீட்டுக் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் முறை மற்றும் எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் பணிகள் குறித்தும் இங்கு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்ததுடன், தொல்பொருள் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம், மகாவலி அதிகார சபை போன்ற நிறுவனங்கள் பழைய கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுவதால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் முகங்கொடுக்க நேர்ந்துள்ள பிரச்சினைகள் குறித்தும் பிரதிநிதிகள் ஜனாதிபதியை தெளிவுபடுத்தினர்.

இந்த அனைத்துக் கருத்துகளையும் கேட்டறிந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தமிழ் மொழி பேசும் மக்களின் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்கு, சமூகத்தில் தவறான புரிதல்கள் ஏதும் ஏற்படாதவாறு பொதுவாக மக்கள் பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்துமாறும் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

# தாயின் வயிற்றுக்குள் தொடங்கும் மனிதரின் வாழ்க்கை

## கருத்தரித்த மனித வாழ்வின் முப்பத்தொன்பதாவது நாள் என்ன நடக்கும்?




மனித வாழ்வின் முப்பத்தொன்பதாவது நாள் என்பது கருவின் வளர்ச்சியில் ஐந்தாவது வாரத்தின் இறுதிப் பகுதியையும், ஆறாவது வாரத்தின் தொடக்கத்தையும் குறிக்கும் மிக முக்கியமான காலகட்டமாகும். இந்த நிலையில் கரு இன்னும் சில மில்லிமீட்டர் அளவு மட்டுமே இருந்தாலும், அதற்குள் நடைபெறும் உயிரியல் மாற்றங்கள் மிகவும் ஆச்சரியமானவை.

இந்த காலத்தில் மூளை, இதயம், நரம்பு மண்டலம், முக அமைப்பு, கை மற்றும் கால் உறுப்புகள், உட்புற உறுப்புகள் போன்ற அனைத்தும் மிக வேகமாக வளர்ச்சி பெறுகின்றன. மரபணுக்களின் துல்லியமான கட்டுப்பாட்டின் கீழ் ஒவ்வொரு உயிரணுவும் தனது குறிப்பிட்ட பணியை மேற்கொண்டு, முழுமையான மனித உடலின் அடித்தளத்தை உருவாக்குகிறது.

### கருவின் வளர்ச்சி மற்றும் வெளிப்புற அமைப்பு

முப்பத்தொன்பதாவது நாளில் கரு முந்தைய வளைந்த வடிவத்திலிருந்து மெதுவாக நீண்டு நேராகும் தன்மையைப் பெறத் தொடங்குகிறது. இருப்பினும் அதன் தலைப்பகுதி இன்னும் உடலின் மற்ற பகுதிகளை விட பெரியதாக காணப்படுகிறது. இதற்குக் காரணம் மூளை மிக வேகமாக வளர்ந்து வருவதாகும்.

கழுத்துப் பகுதி மெதுவாகத் தெளிவடைகிறது. உடலின் நீளம் அதிகரிக்கிறது. முதுகெலும்பின் ஆரம்பப் பகுதிகள் உருவாகத் தொடங்குகின்றன.

மேல் கை மற்றும் கீழ் கால் முளைகள் தொடர்ந்து வளர்ச்சி பெற்று, எதிர்காலத்தில் உருவாக இருக்கும் கைகள், விரல்கள், கால்கள் மற்றும் பாத அமைப்புகளுக்கான அடிப்படையை உருவாக்குகின்றன.

### மூளை மற்றும் நரம்பு மண்டலத்தின் வேகமான வளர்ச்சி

இந்த காலகட்டத்தில் மத்திய நரம்பு மண்டலம் மிக வேகமாக வளர்ச்சி பெறுகிறது. மூளையின் ஆரம்ப பகுதிகள் தொடர்ந்து விரிவடைந்து, எதிர்காலத்தில் பெருமூளை, சிறுமூளை மற்றும் மூளைத்தண்டு உருவாகும் அடித்தளத்தை அமைக்கின்றன.

நரம்பு உருவாக்கும் உயிரணுக்கள் தொடர்ந்து பிரிந்து புதிய நரம்பணுக்களை உருவாக்குகின்றன. பின்னர் மனிதனின் சிந்தனை, நினைவாற்றல், உணர்வு மற்றும் இயக்கம் போன்ற அனைத்து செயல்பாடுகளுக்கும் இவை அடிப்படையாக அமையும்.

நரம்பு முகடு உயிரணுக்கள் உடலின் பல பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து, புற நரம்புகள், முக அமைப்புகள், தோல் நிறமி செல்கள் மற்றும் பல முக்கிய திசுக்களின் உருவாக்கத்தில் பங்கு பெறுகின்றன.

### இதய வளர்ச்சி

மனித உடலில் முதலில் செயல்படத் தொடங்கும் உறுப்பு இதயமாகும். முப்பத்தொன்பதாவது நாளில் இதயம் தொடர்ந்து துடித்து, கருவின் உடல் முழுவதும் இரத்த ஓட்டத்தை ஏற்படுத்துகிறது.

இதயத்தின் உள்ளமைப்பு தொடர்ந்து மாற்றம் பெற்று, எதிர்கால வலது மற்றும் இடது அறைகள் உருவாகும் வகையில் பிரிவுகள் வளர்ச்சி அடைகின்றன.

முக்கிய இரத்தக் குழாய்களும் தொடர்ந்து கிளைகளாகப் பிரிந்து வளர்கின்றன. இதன் மூலம் ஆக்சிஜன் மற்றும் ஊட்டச்சத்துக்கள் கருவின் அனைத்து பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன.

### முக அமைப்பின் வளர்ச்சி

இந்த நிலையில் முகத்தின் ஆரம்ப வடிவம் தெளிவாக உருவாகத் தொடங்குகிறது. கண்கள் உருவாகும் பகுதிகள் வெளிப்படையாகத் தெரிகின்றன. விழித்திரை உருவாக்கத்திற்கான ஆரம்ப மாற்றங்கள் நடைபெறுகின்றன.

மூக்கின் ஆரம்ப குழிகள் ஆழமடைகின்றன. மேல் தாடை மற்றும் கீழ் தாடையை உருவாக்கும் பகுதிகள் வளர்ச்சி பெற்று ஒன்றிணையத் தொடங்குகின்றன.

காதுகளின் ஆரம்ப அமைப்புகளும் தொடர்ந்து வளர்ச்சி பெற்று, எதிர்கால இயல்பான இடத்தை நோக்கி நகர்கின்றன.

### கை மற்றும் கால் உறுப்புகளின் வளர்ச்சி

மேல் கை உறுப்புகள் இப்போது மேலும் தெளிவான அமைப்பைப் பெறுகின்றன. முழங்கை மற்றும் மணிக்கட்டு பகுதிகள் உருவாகத் தொடங்குகின்றன.

கைத் தட்டுகள் விரிவடைந்து, எதிர்கால விரல்களின் ஆரம்ப அடையாளங்கள் தோன்றுகின்றன.

கீழ் கால் உறுப்புகளும் தொடர்ந்து நீளமாக வளர்கின்றன. முழங்கால், கணுக்கால் மற்றும் பாத அமைப்புகளுக்கான உயிரணு மாற்றங்கள் நடைபெறுகின்றன.

### எலும்பு மற்றும் தசை வளர்ச்சி

கருவின் இணைப்பு திசுக்கள் எதிர்கால எலும்புகளுக்கான குருத்தெலும்பு வடிவங்களை உருவாக்குகின்றன.

முதுகெலும்பு பகுதிகள் தெளிவாகப் பிரிந்து வளரத் தொடங்குகின்றன.

தசைகளை உருவாக்கும் உயிரணுக்கள் தொடர்ந்து பெருகி, எதிர்கால உடல் இயக்கங்களுக்கு தேவையான தசை அமைப்புகளை உருவாக்குகின்றன.

தாயால் உணர முடியாத அளவில் இருந்தாலும், நரம்பு மற்றும் தசைகளுக்கிடையிலான தொடர்புகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

### உட்புற உறுப்புகளின் வளர்ச்சி

நுரையீரலின் ஆரம்ப கிளைகள் தொடர்ந்து வளர்ச்சி பெற்று சிக்கலான அமைப்புகளாக மாறுகின்றன.

கல்லீரல் இந்த நிலையில் மிகப்பெரிய உறுப்புகளில் ஒன்றாக இருந்து, ஆரம்ப இரத்த அணுக்கள் உருவாகும் முக்கிய இடமாக செயல்படுகிறது.

கணையம், வயிறு மற்றும் குடல் பகுதிகளும் தொடர்ந்து வளர்ச்சி பெற்று, எதிர்கால செரிமான அமைப்பிற்கான அடித்தளத்தை உருவாக்குகின்றன.

சிறுநீரகங்களும் ஆரம்ப வளர்ச்சி நிலைகளை கடந்து, பின்னர் முழுமையான செயல்பாட்டை அடையும் வகையில் முன்னேறுகின்றன.

### நஞ்சுக்கொடி மற்றும் கருவின் பராமரிப்பு

நஞ்சுக்கொடி தொடர்ந்து வளர்ச்சி பெற்று, தாய் மற்றும் கருவுக்கு இடையிலான ஆக்சிஜன், ஊட்டச்சத்து மற்றும் கழிவுப் பொருள் பரிமாற்றத்தை மேம்படுத்துகிறது.

இது கர்ப்பத்தை தொடர்ந்து பாதுகாக்க தேவையான முக்கிய ஹார்மோன்களான மனித கோரியோனிக் கோனாடோட்ரோபின், புரோஜெஸ்டிரோன் மற்றும் ஈஸ்ட்ரோஜன் போன்றவற்றை உற்பத்தி செய்கிறது.

### மரபணு கட்டுப்பாடு

முப்பத்தொன்பதாவது நாளில் நடைபெறும் அனைத்து வளர்ச்சி மாற்றங்களும் மிகத் துல்லியமான மரபணு கட்டுப்பாட்டின் கீழ் நடைபெறுகின்றன.

HOX, SHH, FGF, BMP மற்றும் WNT போன்ற மரபணு வழித்தடங்கள் உடல் வடிவமைப்பு, உறுப்புகள் உருவாக்கம், கை-கால் வளர்ச்சி மற்றும் உடல் சமநிலையை கட்டுப்படுத்துகின்றன.

இந்த நுட்பமான செயல்முறைகளின் மூலம் ஒவ்வொரு உறுப்பும் சரியான இடத்திலும் சரியான வடிவத்திலும் உருவாகிறது.

### மருத்துவ முக்கியத்துவம்

முப்பத்தொன்பதாவது நாள் இன்னும் கருவுறுப்பு உருவாக்கத்தின் மிக முக்கியமான காலகட்டத்தில் உள்ளது. மதுபானம், புகைப்பிடித்தல், சில தீங்கு விளைவிக்கும் மருந்துகள், கதிர்வீச்சு, தொற்றுகள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகள் போன்றவை கருவின் இயல்பான வளர்ச்சியை பாதிக்கக்கூடும்.

போதுமான ஃபோலிக் அமிலம், சமநிலையான உணவு, தீங்கு விளைவிக்கும் பொருட்களைத் தவிர்த்தல் மற்றும் முறையான கர்ப்பகால மருத்துவ கண்காணிப்பு ஆகியவை ஆரோக்கியமான கரு வளர்ச்சிக்கு முக்கியமானவை.

மனித வாழ்வின் முப்பத்தொன்பதாவது நாள் என்பது சில மில்லிமீட்டர் அளவுள்ள கருவிற்குள் அற்புதமான உயிரியல் நிகழ்வுகள் நடைபெறும் ஒரு முக்கியமான கட்டமாகும்.

இதயம் தொடர்ந்து துடிக்கிறது. மூளை வேகமாக வளர்கிறது. முக அமைப்பு உருவாகிறது. கை, கால் உறுப்புகள் தனித்துவமான வடிவத்தைப் பெறுகின்றன. ஒவ்வொரு உயிரணுவும் எதிர்கால மனித வாழ்க்கைக்கான அடித்தளத்தை அமைக்கிறது.

இந்த காலகட்டம் மனித உடல் உருவாக்கத்தின் நுணுக்கத்தையும், இயற்கையின் அற்புதமான உயிரியல் திட்டமிடலையும் வெளிப்படுத்தும் ஒரு சிறப்பான அத்தியாயமாகும்.

***ஈழத்து நிலவன் - மருத்துவமனை விசேட மருந்தியல் நிபுணர்***
***மருத்துவ மருந்தியல் மற்றும் சிகிச்சையியல்***
***மருந்துப் பாதுகாப்பு கண்காணிப்பு / மருத்துவ ஆராய்ச்சி / தனிநபர் சார்ந்த மருத்துவம் மேம்பட்ட ஆராய்ச்சிப் பட்டப்படிப்பு (முதுநிலை அறிவியல் பட்டம் - முதுநிலை ஆராய்ச்சிப் பட்டம் / முனைவர் பட்டம்) | அரசு மருத்துவ ஆராய்ச்சியாளர்***

---



இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# தையிட்டி பவானி வீதி திறப்பு தொடர்பாக பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி!

## வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோர் வழக்கிலிருந்து விடுவிப்பு



தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அண்மையில் உள்ள பவானி வீதி விவகாரம் குறித்து பலாலி பொலிசார் தாக்கல் செய்த வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு பிரதிவாதிகளான வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு அண்மையில் உள்ள பிரதேச சபையின் வீதியான பவானி வீதியில் ஏற்படுத்தப்பட்ட தடை தொடர்பாக பிரதேச சபைகள் கட்டளை சட்டத்தின் 59வது பிரிவின் கீழ் பிரதேச சபையினால் அறிவித்தல் ஒன்று செய்யப்பட்டது.

அந்த அறிவித்தலானது சமாதான சீர்குலைவை ஏற்படுத்தும் என்ற அடிப்படையில் கடந்த மே 10ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றத்தில் பலாலி பொலிசாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவையின் 81வது பிரிவின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கில் பிரதிவாதிகளாக வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் அதே பிரதேச சபையின் செயலாளர் குறிப்பிடப்பட்டனர்.

குறித்த இருவரும் நியதிச் சட்டத்தை நிறைவேற்றுகின்ற நிலையில் உள்ளவர்கள். ஒரு பகிரங்க அதிகார சபையினால் எடுக்கின்ற தீர்மானமானத்தை எழுத்தாணை வழக்கு ஒன்றின் மூலமே கேள்விக்கு உட்படுத்துகின்ற முடியும். அதாவது வடக்கு மாகாண மேல் நீதிமன்றத்திலேயே இது தொடர்பான வழக்கினை தாக்கல் செய்ய முடியும்.

பொலிசாரும் ஒரு அரச திணைகளத்தை சார்ந்தவர்கள். ஒரு அரச திணைக்களம் இன்னொரு அரச திணைக்களத்துக்கு எதிராக 81வது பிரிவின்கீழ் நியதி சட்டத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக வழக்கினை கொண்டுவர முடியாது என்ற விடயம் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட நிலையில். அது தொடர்பான கட்டளைக்காக வழக்கானது தவணையிடப்பட்டது.

அந்த வகையில் அது தொடர்பான கட்டளையானது இன்றைய தினம் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது. அதாவது சமாதான குலைவை ஏற்படுத்துவதற்கான ஆதாரத்தை, வழக்கு தொடுநரான பலாலி பொலிசார் முன்வைத்திருக்கவில்லை என்ற அடிப்படையில் இந்த வழக்கினை தள்ளுபடி செய்து பிரதிவாதிகள் இதுவரையும் நீதிமன்றமானது வழக்கிலிருந்து விடுவித்தது.

சினிமா

# பா.ரஞ்சித் கூட்டணியில் மணிகண்டன் நடிக்கும் திரைப்படம் "மக்கள் காவலன்"




பா.ரஞ்சித் கூட்டணியில் மணிகண்டன் நடிக்கும் திரைப்படம் "மக்கள் காவலன்". திரைக்கதை எழுத்தாளரும், நடிகருமான மணிகண்டன் "பீட்சா 2" படம் மூலமாக சினிமாவில் அறிமுகமானார். காலா, ஜெய் பீம், குட் நைட் மற்றும் லவ்வர் ஆகிய படங்களில் இவரது கதாபாத்திரம் பெரியளவில் பேசப்பட்டது. "குட் நைட்" படத்திற்கு நல்ல வரவேற்பு அளிக்கப்பட்டது. விஜய்யின் "கோட்" படத்தில் ஏஐ தொழில்நுட்பம் மூலமாக உருவாக்கப்பட்ட விஜயகாந்திற்கு இவர்தான் பின்னணி குரல் கொடுத்திருந்தார்.

இவர் நடித்த "குடும்பஸ்தன்" படம் வெளியாகி வெற்றிப்படமானது. இவர் நடிக்கும் அல்லது வசனம் எழுதும் அனைத்து படங்களும் மக்களிடம் பெரிதும் கவனம் பெற்றவையாகத்தான் இருக்கின்றன. இவரது நடிப்பில் வெளியாகும் படங்கள் எளிய மக்களின் யதார்த்த வாழ்வினை, வாழ்க்கையின் வலிகளை உணர்த்தும் படமாகத் தான் இருக்கின்றன. எனவே தான், இவரது படங்கள் அனைத்து தரப்பு மக்களின் கவனத்தையும் பெற்றுள்ளன. அதனாலேயே, இவரது படங்கள் மீது ரசிகர்களுக்கு மிகுந்த ஆர்வம் ஏற்பட்டுள்ளது. திரைக்கதை எழுதுவதிலும் ஆர்வம்கொண்ட மணிகண்டன் "விக்ரம் வேதா" படத்தில் வசனம் எழுதி கவனம் ஈர்த்தார்.

"நரை எழுதும் சுயசரிதம்" என்ற படத்தினையும் இயக்கியுள்ளார். "குடும்பஸ்தன்" வெற்றிக்குப் பிறகு எந்தப் படத்தில் நடிப்பார் என்ற தேடுதல் நீண்ட நாள்களாக சென்றுகொண்டிருந்தன. இந்த நிலையில், நீலம் புரடக்ஷன்ஸ் மற்றும் பிரலா ஸ்டூடியோஸ் தயாரிக்கும் புதிய படத்திற்கு "மக்கள் காவலன்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தினை ப.ரஞ்சித்தின் உதவி இயக்குநர் சந்தோஷ் குமார் இயக்க உள்ளார். இப்படத்தில் மணிகண்டன் காவலதிகாரியாக நடித்துள்ளார். அவருடன் வாகை சந்திரசேகர், ஏ. வெங்கடேஷ், ஆர்.கே. விஜய்முருகன், சண்முகம் முத்துசாமி, சபுமோன், உன்னி மாயா, திவ்யா ஸ்ரீபாதா, ஜென்சன் திவாகர், லல்லு, ஜெமினி மணி மற்றும் ரகு ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்தப் படத்துக்கு நிவாஸ் கே பிரசன்னா இசையமைக்கிறார்.

# கார்த்திக் சுப்பராஜ் இயக்கிய "டோரதி" திரைப்படத்தின் முன்னோட்டத்தை தனுஷ் வெளியிட்டார்




இயக்குநர் கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் கீர்த்தி சுரேஷ் நடித்துள்ள "டோரத்தி" படத்தின் முன்னோட்டத்தை நடிகர் தனுஷ் வெளியிட்டார். "பீட்சா", "ஜிகர்தண்டா", "இறைவி", "பேட்ட", "மகான்", "ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்", "ரெட்ரோ" உள்ளிட்ட வெற்றிப் படங்களை இயக்கிய கார்த்திக் சுப்பராஜ், தற்போது தனது 10-வது திரைப்படமாக "டோரதி" என்ற படத்தை இயக்கியுள்ளார். இந்த படத்தில் கீர்த்தி சுரேஷ், சனந்த், ரிஷிகாந்த் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்த படத்திற்கு இசையமைப்பாளர் இசைஞானி இளையராஜா இசையமைத்துள்ளார். இது அவரது திரையுலகப் பயணத்தில் 1540-வது திரைப்படம் என்பது குறிப்பிடத்தக்கது.

கார்த்திக் சுப்பராஜ் இயக்கிய 9 படங்களில், "பேட்ட" திரைப்படத்திற்கு மட்டும் அனிருத் இசையமைத்திருந்தார். மற்ற அனைத்து படங்களுக்கும் சந்தோஷ் நாராயணன் இசையமைத்திருந்தார். அதே நேரத்தில், தனது படங்களில் இளையராஜாவின் பாடல்கள் அல்லது பின்னணி இசையை முக்கிய காட்சிகளில் பயன்படுத்துவதை கார்த்திக் சுப்பராஜ் வழக்கமாகக் கொண்டிருந்தார். தற்போது முதன்முறையாக, முழு திரைப்படத்திற்கும் இளையராஜாவையே இசையமைக்க வைத்திருப்பது ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது. இத்திரைப்படம், செப்டம்பர் 25-ஆம் தேதி உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாக உள்ளது. கார்த்திக் சுப்பராஜ் - இளையராஜா கூட்டணியில் உருவாகியுள்ள இந்த படம் ரசிகர்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில், நடிகரும், இயக்குநருமான தனுஷ் "டோரதி" படத்தின் முன்னோட்டத்தை தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளார்.



# "ராமாயணா" திரைப்படம் நவம்பர் 6ம் தேதி வெளியாகிறது

"ராமாயணா" படம் நவம்பர் 6ம் தேதி வெளியாகிறது. நிதேஷ் திவாரி இயக்கத்தில், ரன்பீர் கபூர், யாஷ், சாய்பல்லவி ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளப் படம் ராமாயணா.

நமித் மல்ஹோத்ரா தயாரிப்பில் உருவாகியுள்ள இப்படத்தின் முதல் பாகம் தீபாவளி பண்டிகையொட்டி வெளியாகும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இப்படம் நவம்பர் 6ம் தேதி வெளியாகும் என ஆங்கில முன்னோட்டத்தில் படக்குழு குறிப்பிட்டுள்ளது. தமிழ் முன்னோட்டம் ஜூலை30ம் தேதி வெளியிடப்பட்டது. படத்தில் ரவி துபே, சன்னி தியோல், அருண் கோவில், லாரா தத்தா, ரகுல் ப்ரீத் சிங், குணால் கபூர், சோபனா ஆகியோரும் நடித்துள்ளனர். பிரைம் ஃபோகஸ் ஸ்டுடியோஸ், மான்ஸ்டர் மைண்ட் கிரியேஷன்ஸ் இணைந்து தயாரித்துள்ள படத்திற்கு ஏ.ஆர். ரஹ்மான் மற்றும் ஹான்ஸ் ஜிம்மர் ஆகியோர் இசையமைத்துள்ளனர்.

# விஷாலின் "மகுடம்" திரைப் படம் ஆகஸ்ட் 14ம் தேதி வெளியாகிறது

விஷாலின் மகுடம் படம் ஆகஸ்ட் 14ம் தேதி வெளியாகிறது, விஷால் இயக்கி, நடித்துள்ள புதியப் படம் மகுடம். இப்படம் மூலம் விஷால் தமிழ் திரையுலகில் இயக்குநராகவும் கால்பதிக்கிறார்.

ஆக்ஷன் என்டர்டெயினராக உருவாகியுள்ள இப்படத்தில் அஞ்சலி, துஷாரா விஜயன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். மேலும் இப்படத்தில் விஷால் மூன்று கதாபாத்திரங்களில் நடித்துள்ளார். தனது 99வது படமாக இப்படத்தை சூப்பர் குட் ஃபிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்க, ஜி.வி.பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். படம் ஆகஸ்ட் 14ந் தேதி வெளியாக உள்ளநிலையில், இதன் முன்னோட்டம் நாளை வெளியாகிறது. இந்நிலையில் இன்று இப்படத்தின் காத்தாக வாழப்போறேன் பாடல் வெளியாகி உள்ளது. விவேக் வரிகளில் உருவாகியுள்ள இப்பாடலை ஹரிஹரன், மேக்னா சுமேஷ் பாடியுள்ளனர்.





# இரண்டு மரண தண்டனைகளும் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையும்!

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**முன்னாள் போலீஸ்மா அதிபர் ஒருவருக்கு மரண தீர்ப்பு விதிக்கப்பட்டிருப்பது இதுதான் முதல் தடவை. நாட்டின் பாதுகாப்புத் துறைச் செயலர் ஒருவர் மரண தீர்ப்புக்கு உள்ளாகி இருப்பதும் இதுதான் முதல் தடவை. மரணத் தீர்ப்பு விதிக்கப்பட்ட இருவருமே தாங்கள் கருவிகள் என்ற பொருள்பட கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். தமக்கு மேலே பொறுப்பில் இருந்தவர்கள் இட்ட உத்தரவுக்கு அமைய தாங்கள் செயல்பட்டதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். இந்த இரண்டு மரணத் தீர்ப்புகளின் மூலமும் ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பில் யார் யார் சூத்திரதாரிகள் என்று சந்தேகிக்கப்படுகிறார்களோ அவர்கள் அனைவரையும் அரசாங்கம் தற்காப்பு நிலைக்குத் தள்ளியிருக்கிறது. அதேசமயம் உள்நாட்டு நீதியின் நம்பகத்தன்மையை இது மேலும் பலப்படுத்த உதவுமா?**

இரண்டு மரணத் தீர்ப்புகள் அரசாங்கம் எதிர்பார்க்கும் இரண்டு முக்கிய விளைவுகளை ஏற்படுத்துமா? முதலாவது எதிர்க்கட்சிகளை மேலும் தற்காப்பு நிலைக்குத் தள்ளுவது. இரண்டாவது, உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை, உள்நாட்டு நீதி பரிபாலனத்துறை போன்றவற்றின் நம்பகத்தன்மையை அனைத்துலக அளவில் பலப்படுத்துவது.

முன்னாள் போலீஸ்மா அதிபர் ஒருவருக்கு மரண தீர்ப்பு விதிக்கப்பட்டிருப்பது இதுதான் முதல் தடவை. நாட்டின் பாதுகாப்புத் துறைச் செயலர் ஒருவர் மரண தீர்ப்புக்கு உள்ளாகி இருப்பதும் இதுதான் முதல் தடவை. மரணத் தீர்ப்பு விதிக்கப்பட்ட இருவருமே தாங்கள் கருவிகள் என்ற பொருள்பட கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். தமக்கு மேலே பொறுப்பில் இருந்தவர்கள் இட்ட உத்தரவுக்கு அமைய தாங்கள் செயல்பட்டதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். இந்த இரண்டு மரணத் தீர்ப்புகளின் மூலமும் ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பில் யார் யார் சூத்திரதாரிகள் என்று சந்தேகிக்கப்படுகிறார்களோ அவர்கள் அனைவரையும் அரசாங்கம் தற்காப்பு நிலைக்குத் தள்ளியிருக்கிறது. அதேசமயம் உள்நாட்டு நீதியின் நம்பகத்தன்மையை இது மேலும் பலப்படுத்த உதவுமா?

இந்த வாரம் ஐநா மனித உரிமைகள் ஆணையாளருடைய பதவிக்காலத்தை மேலும் நீடிப்பதற்கு வாக்கெடுப்பு நடந்தது. இந்த வாக்கெடுப்பில் இலங்கை நடுநிலை வகித்தது. இலங்கை ஏன் அவரை ஆதரிக்கவில்லை என்ற கேள்விக்கு கூறப்படும் விடை என்னவென்றால், அவர் பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகித்தவர் என்பதாகும். ஆனால் அது உண்மையா? அவர் தனது இலங்கை விஜயத்தின் முடிவில் உத்தியோகபூர்வமாக தெரிவித்த கருத்துக்கள் அரசாங்கத்துக்குச் சாதகமானவை. தேசியத் தன்மைமிக்க ஒரு பொறிமுறையை பன்னாட்டு நிபுணத்துவ உதவியோடு பலப்படுத்துவது என்றுதான் அவர் கூறியிருந்தார். அப்படிப் பார்த்தால் அவர் கேட்டதைத்தான் இப்பொழுது ஸ்ரீலங்கா அரசாங்கம் செய்துவருகிறது. ஆனாலும் அதை விடவும் கூடுதலாக அவர் செய்திருக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசாங்கம் கருதுகிறது என்பதனால்தான் அவருடைய பதவி காலத்தை நீடிப்பதற்கான வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லையா?

கடந்த ஆண்டு ஐநா தீர்மானத்தின் 43ஆவது பந்தியில் ஒரு விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தீவின் இன முரண்பாட்டு வரலாற்றில் பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டின் பேரில் படைத்தரப்பைக் சேர்ந்தவர் தண்டிக்கப்பட்ட ஒரே ஒரு சந்தர்ப்பமாக கிரிசாந்தி படுகொலை வழக்கைதான் அந்த 43ஆவது பந்தி குறிப்பிடுகிறது. அதற்குப் பின்பு நடந்த விஸ்வமடு பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் நீதிமன்றத்தால் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்ட படைத்தரப்பினர் பின்னர் மேல்முறையீடு செய்து வெளியே வந்து விட்டார்கள் என்பதையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. எனினும் செம்மணிக்கு வந்து விட்டுச் சென்ற ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் தேசியத்தன்மை மிக்க உள்நாட்டுப் பொறிமுறை குறித்துதான் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அதுமட்டுமல்ல, கடந்த ஆண்டு ஐநா தீர்மானத்தின் மேற்குறிப்பிட்ட பந்தியில் கூறப்பட்டிருப்பதுபோல இலங்கைத் தீவின் இன முரண்பாட்டு வரலாற்றில் பாலியல் வன்முறை சார்ந்த குற்றச் செயலுக்காகத் தண்டிக்கப்பட்ட இளநிலை அதிகாரியான சோமரத்ன ராஜபக்ஷ என்பவர் அக்குற்றத்தை தான் புரியவில்லை என்றும், தான் ஒரு கருவி மட்டுமே என்றும் பொருள் கொள்ளத்தக்க விதத்தில் கடந்த சுமார் மூன்று தசாப்த காலங்களுக்கு மேலாக பகிரங்கமாகக் கூறி வருகிறார். தனக்கு உத்தரவிட்ட பலர் இப்பொழுது பத்திரமாகப் பாதுகாப்பாக இருப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டி வருகிறார். மேலும் பல புதை குழிகளை தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும் அவர் ஏற்கனவே கூறிவிட்டார். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரும் அவர் சார்பாக அவருடைய மனைவி அவர் கூறிய விடயங்களை வெளிப்படுத்தி வருகிறார்.

இப்பொழுது மரணத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும் முன்னாள் போலீஸ்மா அதிபரும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஏறக்குறைய அப்படித்தான் கூறுகிறார்கள். தாங்கள் கருவிகள் என்ற பொருள்பட. அப்படியானால் கடந்த சுமார் நான்கு தசாப்த காலத்துக்கு மேலான போர்ப் பரப்புக்குள் நிகழ்ந்த பல குற்றங்களுக்காக குற்றம் சாட்டப்படும் பெரும்பாலானவர்கள் தங்கள் கருவிகள் என்றே கூறுகிறார்கள். தங்களுடைய மேலதிகாரிகளை அல்லது தங்களுக்கு உத்தரவிட்ட அரசியல்வாதிகளை அவர்கள் குற்றம் சாட்டுவதாகத் தெரிகிறது.

அதிலும் குறிப்பாக அண்மையில் மரணத் தீர்ப்பு விதிக்கப்பட்டிருக்கும் இருவருமே நாட்டின் உயர் பொறுப்புகளை வகித்தவர்கள். அதுபோல இப்பொழுது தடுப்புக்காவல் விசாரணையில் இருக்கும் சுரேஷ் சலே நாட்டின் உயர் பொறுப்பில் அதாவது சக்திமிக்க படைப் புலனாய்வுக் கட்டமைப்பின் பணிப்பாளராக இருந்தவர்.

இவர்கள் அனைவரும் குற்றச் சங்கிலித் தொடருக்குள் கண்ணிகளாகக் காணப்படலாம் என்றால் அதை இவர்களுடைய தனிப்பட்ட குற்றங்களாக எடுத்துக் கொள்வதா? அல்லது கட்டமைப்பு சார்ந்த குற்றங்களாக எடுத்துக் கொள்வதா? இவ்வளவு உயர் பொறுப்பில் இருந்தவர்களே இவ்வாறு விசாரிக்கப்படவும் தண்டிக்கப்படவும்கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருப்பது என்பது எதைக்காட்டுகிறது? இலங்கைத் தீவின் படைத்துறை, படைப் புலனாய்வுத்துறை, பாதுகாப்புத் துறை, சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பில் இருந்தவர்கள்... குற்றங்களைத் தடுக்கத் தவறியிருக்கிறார்கள். அல்லது தங்களுக்கு மேலிருந்து உத்தரவிட்டவர்களின் சேவகர்களாகச் செயல்பட்டிருக்கிறார்கள். எனவே இவை தனிப்பட்ட குற்றச்செயல்கள் அல்ல கட்டமைப்பு சார்ந்த குற்றச் செயல்கள்தான்.

இவர்களைப் போன்ற உயர் பொறுப்பில் இருந்தவர்கள் குற்றம் செய்யும் அளவுக்கு மேற்சொன்ன கட்டமைப்புகள் குற்றப் பண்புமிக்கவைகளாக இருந்தன என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். இதை இன்னும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், இனமுரண்பாட்டின் பின்னணியில் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எதிரான குற்றங்கள் மன்னிக்கப்படுகின்ற அல்லது நியாயப்படுத்தப்படுகின்ற அல்லது தண்டிக்கப்படாத ஒரு பாரம்பரியத்தின் பின்னணியில், இவர்கள் பொறுப்பாக இருந்த கட்டமைப்புகள் குற்றப் பண்பு மிக்கவைகளாகக் காணப்பட்டன என்பதைத்தான்.

தேசிய மக்கள் கட்சி அரசாங்கம் இவர்களைக் கைது செய்வதன் மூலம் இவர்களையும் இவர்களுக்கு உத்தரவிட்ட அரசியல்வாதிகளையும் குற்றவாளிகளாக்கி அவர்கள் மீது பழியை போட்டுவிட்டு தப்பிச்செல்ல முடியாது. மாறாக அவை கட்டமைப்பு சார்ந்த குற்றங்கள் என்பதனை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் குறிப்பிட்ட கட்டமைப்புகளை மறு கட்டமைப்புச் செய்ய வேண்டும். நிலைமாறு கால நீதியானது அதைத்தான் கோரி நிற்கின்றது.

ஆனால் இங்குள்ள தோல்வி என்னவென்றால், நிலைமாறு கால நீதிச் செய்முறைகள் முன்னெடுக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில்தான் ஈஸ்டர் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன என்பதுதான். அதாவது 2015ல் ஐநாவில் நிறைவேற்றப்பட்ட நிலைமாறு கால நீதிக்கான தீர்மானத்தின் பின்னிருந்து நாட்டில் கட்டமைப்புசார் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்க வேண்டிய ஒரு பின்னணியில், ஆனால் பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொடகூறியதுபோல அவ்வாறான கட்டமைப்புசார் மாற்றங்கள் முன்னெடுக்கப்படாத ஒரு பின்னணியில், ஈஸ்டர் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. அது ஒருவிதத்தில் ஐநாவின் தோல்வியையும் காட்டுகிறது. நிலைமாற்றம் நிகழாத ஒரு நாட்டில் நிலை மாறுகால நீதியை அமுல்படுத்த முயற்சித்த ஐநா மனித உரிமைகள் பேரவையின் தோல்வியை அது காட்டுகிறது.

நிலைமாறு கால நீதியானது இலங்கை தீவில் எதிர்மறை விளைவுகளைத்தான் ஏற்படுத்தியது. உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை ஏன் தமிழ் மக்கள் நம்பவில்லை என்பதை அது அது ரத்தம் சிந்தி நிரூபித்தது. ஈஸ்டர் குண்டு வெடிப்புகளின் பின்னர் ஆட்சிக்கு வந்த கோட்டாபாய நாட்டில் நீதி பரிபாலன கட்டமைப்பை நிறைவேற்று அதிகாரம் எந்த அளவுக்கு மேவிச் செல்ல முடியும் என்பதனை மீண்டும் ஒருமுறை நிரூபித்தார். மிருசுவில் படுகொலை வழக்கில் நீதிமன்றத்தால் மரணத் தீர்ப்பு வழங்கப்பட்ட ராணுவ சர்ஜன்ரை கோட்டாபய பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார். மிருசுவில் கொலைச் சம்பவத்தில் ராணுவ சார்ஜன்ட் சுணில் ரட்டநாயக்க 2015ல் நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டார். அவருக்கு மரணத் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் 2021ல் ஆட்சிக்கு வந்த கோத்தாபய ராஜபக்ச அவருக்கு பொது மன்னிப்பை வழங்கி விடுதலை செய்தார்.

அவ்வாறு விடுதலை செய்யப்பட்ட சுணில் ரட்டநாயக்க தன்னுடைய நாட்டுக்கு வர முடியாது என்று கனடா அவருக்குப் பயணத் தடை விதித்தது. அவரை பொது மன்னிப்பின்மூலம் விடுதலை செய்த கோத்தாபய ராஜபக்ச உட்பட ஏனைய ராஜபக்சக்களுக்கும் கனடா பயணத் தடை விதித்தது. உள்நாட்டில் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை பிரயோகித்து மன்னிப்பு அளிக்கப்பட்ட ஒருவருக்கு ஒரு வெளிநாடு



அவ்வாறு தண்டனை விதித்தமை என்பது மிகஅரிதான ஒரு புறநடை. தாயகத்துக்கு வெளியே அதிகளவு தமிழர்கள் செறிந்து வாழும் கனடாவில் வாழும் தமிழர்களுக்குக் கிடைத்த முக்கிய வெற்றி அது. பன்னாட்டு விசாரணைப் பொறிமுறை வேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கையைப் பலப்படுத்தும் ஒரு வெற்றியும் அது.

தமிழ் மக்கள் மட்டுமல்ல ராஜபக்ச தரப்பும்கூட பன்னாட்டு விசாரணைப் பொறிமுறை அல்லது வெளிநாட்டு விசாரணைப் பொறிமுறை நம்பகத்தன்மை மிக்கது என்று நம்புகிறது என்பதற்கு ஆகப்பிந்திய உதாரணம் உண்டு. இப்பொழுது கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் இருக்கும் சுரேஷ் சலேயின் வழக்கறிஞரும் ஜனாதிபதி சட்டத்தரணி ஆகிய சஞ்சீவ ஜெயவர்தன அவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார். ஈஸ்டர் குண்டு வெடிப்பு தொடர்பான அனைத்துலக விசாரணைகளின் முடிவில் தமது கட்சிக்காரர் ஆகிய சுரேஷ் சலே குற்றவாளியாகக் காணப்படவில்லை என்பதனை அவர் தனது கட்சிக்காரரை நியாயப்படுத்துவதற்கு ஓர் ஆதாரமாக முன்வைக்கின்றார். அதாவது சுரேஷ் சலேயின் தரப்பு தன்னை நியாயப்படுத்துவதற்கு அனைத்துலக விசாரணையை ஓர் ஆதாரமாகக் காட்டுகிறது. ஈஸ்டர் குண்டு வெடிப்பில் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் சுரேஷ் சலே அவ்வாறு அனைத்துலக விசாரணையின் நம்பகத்தன்மையை ஓர் ஆதாரமாகப் பயன்படுத்தலாம் என்றால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அதைக் கேட்பது நியாயந்தானே?

கடந்த மாத முடிவில் செம்மணியில், யாழ் கத்தோலிக்க மறை மாவட்டத்தைச் சேர்ந்த குருவானவர்கள் ஓர் அமைதிப் பேரணியை முன்னெடுத்தார்கள். அந்தப் பேரணியின் பிரதான கோரிக்கை பன்னாட்டு விசாரணை வேண்டும் என்பதுதான்.

ஆனால் அரசாங்கம் பன்னாட்டு விசாரணையை ஏற்றுக்கொள்ளவில்லை. கடந்த ஆண்டு இடம்பெற்ற ஐநா அமர்வுகளில் அதனை வெளிவகார அமைச்சர் விஜித ஹேரத் திரும்பத்திரும்ப வலியுறுத்திக் கூறியிருந்தார்.

பன்னாட்டு விசாரணைப் பொறிமுறையை ஏற்றுக்கொள்வதில்லை என்றால் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை, உள்நாட்டு நீதி பரிபாலனக் கட்டமைப்பு என்பவற்றின் நம்பகத்தன்மையை உள்நாட்டிலும் அனைத்துலக அளவிலும் பலப்படுத்த வேண்டும். அதை நோக்கி அரசாங்கம் தீர்மானகரமாக இயங்குகிறது. ஏற்கனவே செம்மணிப் புதைகுழி விடயத்தை அரசாங்கம் உள்நாட்டு நீதி நிர்வாகக் கட்டமைப்பின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்துகிறது.

கடந்த சுமார் 23மாதங்களாக அரசாங்கம் முன்னெடுத்துவரும் சட்ட நடவடிக்கைகள் யாவும் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை மற்றும் நீதிபதிபாலன கட்டமைப்பின் நம்பகத்தன்மையை பலப்படுத்தும் நோக்கிலானவைதான். ஆனால் குற்றப்பழியை முன்பிருந்த அரசாங்கங்களின் மீது குறிப்பாக எதிர்க்கட்சிகளின் மீது சுமத்துவதன் மூலம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது தன்னை எல்லாப் பழிகளில் இருந்தும் விடுவித்துக் கொள்ள முயற்சிக்கின்றதா? எதிர்க்கட்சிகளையும் முன்னைய அரசாங்கங்களையும் குற்றவாளிகள் ஆக்குவதன்மூலம் தேசிய மக்கள் சக்தி தன்னை புனிதமானதாகக் காட்டிக்கொள்ள முற்படுகிறதா? தேசிய மக்கள் சக்தியின் கடந்த 23மாத கால ஆட்சியில் அவர்கள் முன்னெடுத்துவரும் கைது, விசாரணை போன்ற சட்ட நடவடிக்கைகள் எதிர்க்கட்சிகளை தற்காப்பு நிலைக்குத் தள்ளியுள்ளன என்பதில் சந்தேகமில்லை. ஆனால் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையின் நம்பகத்தன்மையை பலப்படுத்துவதற்கு அவை போதுமா? குறிப்பாக தமிழ் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் அவை போதுமா? ஏனென்றால் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையின் நம்பகத்தன்னையை பலப்படுத்துவது என்பது தமிழ் மக்களின் நம்பிக்கைகளை வென்றெடுப்பதில்தான் தங்கியிருக்கிறது. காரணம், அந்த விசாரணைப் பொறிமுறையின் பிரதான பலியாடுகளாக இருந்தது அவர்கள்தானே?

# கல் எனும் சொல்லைக் கொண்டு எழுதிய கட்டுரை

Dr. புட்பா கிறிட்டி, (647) 703-5538, pushpachristy@gmail.com

**க**ல் என்றான் அதைப் பல கருத்துக்களாக் கண்டான் மனிதன்.

"கல்" பூமியில் இயற்கையாகக் கிடைக்கும் பாறை, கனிமங்களின் திடமான கலவை. கட்டுமானப் பணிகள், சிலைகள், ஆபரணக் கற்கள் மற்றும் பல பயன்பாடுகளுக்கு உதவுகிறது. இலக்கியங்களில் கல் என்பது பாறை, மலை, நடுகல், வெண்கல் மற்றும் மணி போன்றவற்றை குறிக்கும் சொல்லாக பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக உடைக்கப்பட்ட சிறு கற்கள், பாறைகள், கட்டுமானத்திற்கு பயன்படும் கருங்கல், செங்கல் ஆகியவை கல் எனப்படும்.

உலகம் கல்லால் ஆனது என்பதை சங்க இலக்கியத்திற்குச் சற்றுப் பிந்தைய காலமான புறப்பொருள் வெண்பாமாலை என்ற நூலில் வரும் புகழ்பெற்ற வரிகள்: "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி". இது தமிழ்க்குடியின் தொன்மையைப் பாறைக்கல் உருவான காலத்தோடு ஒப்பிடுகிறது.

"கல்" என்னும் வேர்ச்சொல்லின் பதம், கற்றல் எனும் தொழிற்பெயராகும். வேர்ச்சொல் என்றால் அது, ஒரு சொல்லின் அடிப்படை வடிவம், அதிலிருந்து வினைமுற்று (கற்றான்), வினையெச்சம் (கற்று), பெயரெச்சம் (கற்ற) போன்ற பல வடிவங்களை உருவாக்க முடியும்.

கல்லென்றான் அறிஞன். அதைக் கேட்டதும் மாணவன் புத்தகம் தன்னில் கருத்துவைத்தான்.

கல்வி மனித வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாத ஒன்று. எனவே, ஒரு குழந்தை பிறந்தவுடனேயே, நல்ல பாடசாலையில் அப்பிள்ளையைப் படிக்க வைக்கப் பெற்றோர், பாடசாலைப் பதிவுகளை ஆரம்பிக்கின்றனர்.

**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"**

**(குறள். 391)**

கல்வியைக் கற்க, நல்ல நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும், அவ்வாறு கற்ற பின்னர், கற்ற கல்விக்குத் தக்கவாறு நல்ல நெறியில் நிற்க வேண்டும் என எமக்கு வழிகாட்டியுள்ளார் திருவள்ளுவர். அவர் கல்விக்கு முக்கியம் தந்து, கல்வி எனும் ஒரு தனி அதிகாரத்தையே எமக்குத் தந்து எம்மை வாழ்விக்கின்றார். மேலும் பற்பல இடங்களில், கல்வியின் முக்கியம் அறியக்கூடிய வகையில் பல குறள்களை எமக்குத் தந்துள்ளார்.

**அதிலும்**
**"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்"**

**(குறள். 2)**

தன்னைவிட அறிவில் மூத்த பெருந்தகையாளரின் முன்னே வணங்கி நிற்கும் பண்பு இல்லாவிடில் என்னதான் ஒருவர் கற்றிருந்தாலும் அதனால்என்ன பயன்? ஒன்றுமில்லை எனக் கூறுகிறார் திருவள்ளுவர்.

*கற்றல் பற்றிய சங்க இலக்கியப் பாடல்கள்*

கல்வி (கற்றல்) என்ற பொருளில் "கல்" என்ற வேர்ச்சொல்லின் வினை வடிவமான "கற்றல்" அல்லது "கல்வி" பற்றிய கருத்துக்கள் சங்க இலக்கியத்தில் ஆழமாகப் பதிவாகியுள்ளன.

புறநானூறு (பாடல் 183): ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியின் சிறப்பைப் பாடியது. "உற்றுழி உதவியும் உறுபொருள்: கொடுத்தும்பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" பொருள்: ஆசிரியருக்குத் துன்பம் வரும்போது உதவியும், மிகுந்த பொருள் கொடுத்தும், அவமதிப்பு கொள்ளாமல் பணிந்து நின்று கற்றல் ஒருவனுக்கு மிகச் சிறந்தது.

கல்லைக் கண்டான் ஒருவன், அந்தச் சிற்பி, உளியைத் தனது கரம் எடுத்தான்.

சிற்பம் என்பது, செதுக்கப்பட்டு, முப்பரிமாண வடிவம் கொடுக்கப்பட்ட கற்சிலைகள். இவற்றை மனிதன் உளி கொண்டு, சிலையாக வடிக்கிறான். கல்லைப் பார்க்கும் சிற்பியின் கற்பனையில் அக்கல் ஒரு சிற்பமாக உருவாகும். அக்கல்லைத் தன் கற்பனையில் ஒரு சிலையாகக் காண்பான். அக்கல் அவனைச் சென்று சேர, அதனைச் செதுக்கத் தொடங்கி விடுவான். காலங்கள் செல்வழித்து, அவன் சிலையைச் செய்து முடித்து விடுவான். பலரின் பாராட்டுடன், அவனது, ஆற்றலைத் தானே மெச்சி, தன் கற்பனை வளத்துக்கு உரமளித்து, நற்சிலையைச் செய்து, உளம் மகிழ்வான்.

*சங்க இலக்கியத்தில் கற்சிலை*

சங்க இலக்கியத்தில் "கல்" என்ற சொல் எப்படி வருகிறது? இங்கு கல், "மலை", "பாறை", "கல்வி" மற்றும் "நடுகல்" போன்ற பல்வேறு பொருள்களில் மிகச்சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கல் எனும் சொல் பயின்று வரும் சில முக்கியப் பாடல்கள் மற்றும் அதன் விளக்கங்களும்.

1. மலை அல்லது பாறை என்ற பொருளில்சங்க இலக்கியத்தில், குறிப்பாக குறிஞ்சித் திணைப் பாடல்களில், "கல்" என்பது மலையைக் குறிக்கப் பெருமளவில் பயன்படுத்தப்பட்டது.

புறநானூறு (பாடல் 192): கணியன் பூங்குன்றனார் பாடிய உலகப்புகழ் பெற்ற இப்பாடலில் "கல்" எனும் சொல் பாறையை உருட்டும் நீரின் ஓசையை விவரிக்கிறது."மின்னொடு வானம் தண் துளி தலைஇ, ஆனாதுகல் பொருது இரங்கும் அல்லல் பேர் யாற்று"

இதன் பொருள்: மின்னலுடன் கூடிய மேகம் பெய்த மழையால், விடாது பாறைகளில் மோதி ஒலிக்கும் பெரிய ஆற்றின் வெள்ளம் போன்றது வாழ்க்கை.

குறுந்தொகை (பாடல் 1): "கல் என வரும் ... அருவி"மலைகளில் இருந்து "கல்" என்ற ஒலியுடன் விழும் அருவிகளைக் குறிக்க இச்சொல் ஓசை நயமாகவும் பயன்படுத்தப்பட்டது.

குறிஞ்சிப் பாடல்களில் கல் என்பது மலையையும், பாலைப் பாடல்களில் வெப்பத்தால் வெடித்த பாறைகளையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.

3. நடுகல் (வீரக்கல்)

மரபில் சங்க காலத்தில் போரில் வீரமரணமடைந்த வீரர்களுக்கு அவர்கள் நினைவாகக் கற்கள் நடுகற்கள் நடப்பட்டன. இது "நடுகல்" என்று அழைக்கப்பட்டது. நடு + கல் (நட்ட கல், நடுகின்ற கல், நடும் கல்) என முக்காலமும் மறைந்து வருவதால் வினைத்தொகையாக வரும்.

புறநானூறு (பாடல் 232): "பரலுடை மருங்கின் பதுக்கைச் சேர்த்தமரல் வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொடுஅணிமயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித்துஇனி நட்டனரே கல்லும்"பொருள்: வீரனின் பெயரைப் பொறித்து, பீலி சூட்டி அவனுக்கு நடுகல் நட்ட செய்தியை இப்பாடல் விவரிக்கிறது." கூடுதல் சிறப்பம்சங்கள்கல் தோன்றி மண் தோன்றாக் காலம்: திணைப் பாகுபாடு: குறிஞ்சிப் பாடல்களில் கல் என்பது மலையையும், பாலைப் பாடல்களில் வெப்பத்தால் வெடித்த பாறைகளையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.

கல்லென்றான் மனிதன், அந்தக் கடவுள் இருப்பிடம் கண்டனனே!

கல்லினுள் தேரைக்கும்
கருப்பை உயிர்க்கும்
புல்லுணவே தந்து
போற்றும் நம் நாதன்
சத்வ குண போதன்

தபோவனம் ஞானானந்தகிரி சுவாமிகளிடம் ஒரு அன்பர் சந்தேகம் ஒன்றைக் கேட்டார்.

கல்லினுள் இருக்கும் தேரைக்கும் உணவு கொடுத்து அதன் உயிரைக் காப்பாற்றும் பரம தயாளன் என்று கடவுளைப் போற்றுகிறோம்., ஆனால், வாழ்நாள் முழுவதும் உலக இன்பத்தைக் கண்டு களிக்காமல், உலகமே இன்னதென்று தெரியாமல் கல்லுக்குள் சிறைப்பட்டுக் கிடக்கும் தேரை உயிர் வாழ்வதில் என்ன பொருள் இருக்கிறது?

தேரை இருப்பதால் அந்தக் கல்லும் பயன்படாமல், தேரையும் பழிச்சொல்லுக்கு ஆளாகிறது. இப்படிப்பட்ட தேரைக்கு உணவளித்து, உயிர் வாழ வைப்பது எப்படி தயாள குணமாகும்? எனக் கேட்டான்.

ஞானானந்தகிரி சுவாமிகள் அளித்த விளக்கம்: ஒருவன் ஏதோ குற்றம் இழைத்து விடுகிறான். அவனை அரசாங்கம் சிறையில் அடைக்கிறது. சிறையில் அவன் அடைத்து வைக்கப்படுகிறான். ஆனால், அவனுக்கு உணவு அளிக்க அரசாங்கம் தவறுவதில்லை. ஏனென்றால், அவனுக்கு அளிக்கப்பட்டது சிறைத் தண்டனைதான். தவிர மரண தண்டனையல்ல. அந்தச் சிறைத்தண்டனையை அவன் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக அவனுக்கு உணவு அளித்து உயிருடன் வைத்திருப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகிறது. கரும வினையினால் கல்லினுள் அடைபட்டுக் கிடக்கும் தேரையின் நிலையும் இதுதான். வினைப் பயனை அனுபவித்து, விமோசனம் பெற வேண்டும் என்கிற கருணையினால், அது எப்படியாவது உணவைப் பெற்று உயிர் வாழச் செய்கிறார் கடவுள் . சுவாமியின் விளக்கம் அனைவரையும் மகிழ்வித்தது.

கல்லென்றான் குரல் கொடுத்தான் கொத்தன். மனையில் பதிக்கக் கரமெடுத்தான்.

கட்டுமானத் துறையில் கல் என்பது ஒரு மிக முக்கியமான இயற்கை மூலப்பொருளாகப் பயன்படுகிறது. பழங்காலக் கட்டிடங்கள் முதல் நவீன அலங்காரச் சுவர் வரை கல் பல்வேறு முறைகளில் பயன்படுத்தப்படுகிறது.

கல் கட்டுமானத்தின் வகைகள் :

கல் கட்டுமானத்தை அதன் அடுக்கும் முறையைப் பொறுத்து இரண்டு முக்கிய வகைகளாகப் பிரிக்கலாம்:

1. செதுக்கப்படாத கல் கட்டுமானம்.

இயற்கையாகக் கிடைக்கும் சீரற்ற கற்களைப் பயன்படுத்துதல்.கற்களுக்கிடையேயான இடைவெளியைச் சிமெண்ட் அல்லது சாந்து கொண்டு நிரப்புதல்.சுற்றுச்சுவர்கள் மற்றும் அடித்தளங்களுக்கு இது ஏற்றது.

2. செதுக்கப்பட்ட கல் கட்டுமானம்.

கற்களைச் சதுரமாகவோ அல்லது செவ்வகமாகவோ சீராகச் செதுக்கிப் பயன்படுத்துதல்.கற்களுக்கிடையேயான பிணைப்பு மிகவும் மெல்லியதாகவும் உறுதியாகவும் இருக்கும்.அரண்மனைகள், கோவில்கள் மற்றும் பெரிய கட்டிடங்களுக்கு இது பயன்படுத்தப்படுகிறது.

கட்டுமானத்தில் கற்களின் பயன் கள அடித்தளம் :
கட்டிடத்தின் முழு எடையையும் தாங்குவதற்கு கருங்கற்கள் அடித்தளமாகப் பயன்படுத்தப்படுகின்றன.
தரைத்தளம் :
மார்பிள் , கிரானைட் மற்றும் கோட்டா கற்கள் தரை அழகிற்கும் குளிர்ச்சிக்கும் பயன்படுத்தப்படுகின்றன.
அலங்காரச் சுவர்கள் :
நவீன வீடுகளில் வெளிப்புறச் சுவர்களில் மெல்லிய கல் பலகைகளை ஒட்டி அழகுபடுத்துகின்றனர்.

கல் என்றான், நகை வியாபாரி, இரத்தினக் கல் கொண்டு, நகை செய்தான்.

கல்லை அழகாக நகையினுட் புகுத்தி, அழகான நகை செய்து, மிக்க விலைக்கு விற்று. அதிக லாபம் பெற்று மகிழ்ந்தான் மனிதன்.

இரத்தினம், மரகதம், முத்து போன்ற விலைமதிப்பற்ற கற்கள் அழகு தரும் நகைகளில், பக்குவமாக அமர்ந்து அந்த நகைக்கு அழகு கூட்டும்.

சங்க இலக்கியங்களில் நவரத்தினக் கற்கள்

நவரத்தினங்கள் மற்றும் பல்வேறு விலைமதிப்பற்ற நகைக்கற்கள் பயன்படுத்தப்பட்டதற்கான பல சான்றுகள் உள்ளன. அக்காலத்தில் அலங்காரப் பொருட்கள் மற்றும் ஆபரணங்கள் தயாரிக்கும் தொழில் மிகவும் செழிப்பாக இருந்ததை இவை உணர்த்துகின்றன

தமிழ் இலக்கியத்தில்: கல்ஃதுவர் என்பது சில நேரங்களில் காவி நிறத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது, மேலும் இது வைகல் (விடியல்), அல்கல் (இரவு) போன்ற பொழுதுகளைக் குறிக்கும் சொல்லாகவும் வருகிறது.

சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் சில முக்கிய நகைக்கற்கள்:

- கருமாணிக்கம்
- நீலமணி
- செவ்வந்திக்கல்
- மரகதம்
- வைடூரியம்
- நீலம்
- பச்சை
- மங்கிய சிவப்புக்கல்
- கந்தகக் கல் (கந்தகக் கன்மகி)

இக்கற்கள் ஆபரணங்களில் பதிக்கப்பட்டு, சங்க கால மக்களின் கலைநயத்தையும் செல்வச் செழிப்பையும் வெளிப்படுத்தின.

ஆண் பெண், அலிக் கற்கள்.

கற்களில், ஆண் கல், பெண் கல், அலிக்கல் என கல் உண்டு.

ஆண் கல்: ஆண் கல்லில், ஆண் தெய்வச் சிலைகள் செய்ய உகந்தது. மூலை, தூண் என்பன ஆண் கல்லில் வைப்பார்கள். அதாவது ஆண் கல்லைப் பலம் தாங்கும் இடங்களில் வைப்பார்கள். ஊன்றிக் கால் தாங்கும் கால்வரி, என்னும் இடத்தில், பெரும் கோபுரங்களைத் தாங்கும் இடங்களில், ஆண் கல்லை வைத்துக் கட்டுவார்கள்.

பெண் கல்: நிலக்கால், பெண் கல்லில் வைப்பார்கள். பெண் தெய்வச் சிலைகள் செய்ய உகந்தது.

அலிக் கல்: சில குறிப்பிட்ட தெய்வ வடிவங்கள், தூண்கள், அல்லது நிலைக்கதவு போன்ற உறுதியான பாகங்கள் செய்யப் பயன்படுத்தப்படுகின்றன. சிற்பக் கலை மரபில், ஆண்-பெண் தன்மையற்ற, வலிமையான சிலைகள் மற்றும் கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் ஒரு வகை கல் அலிக் கல் ஆகும் கல் என்னும் சொல்லில், பலவகை கண்டோம். கல்வியினால், கற்றலினால், தொடர்ந்து கற்போம்.

# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் ஆடிப்பூர கஞ்சிக்கலச சிறப்பு பூசை

குருவடி சரணம் திருவடி சரணம்



**மார்க்கம் வீதி ஸ்காபரோவில் அமைந்திருக்கும் மேல்மருவத்துர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்**

11-08-2026 அன்று கடைசி ஆடிச் செவ்வாய்க்கிழமை
அத்துடன் காலை ஆடிஅமாவாசை சிறப்பு பூசையுடன் தந்தையின்
நினைவுநாளை முன்னிட்டு உரிய முறையில் விரதம் இருந்து வருகின்ற
பக்தர்கள் மனதில் 'லட்சுமிகரம்" வந்து சேரும் என்கிறார் அன்னை.
சிறப்பான முறையில் மகே'வரபூசையும் நடைபெறும்.
14-08-2026 வெள்ளி ஆடிப்பூர வழிபாடு.
16-08-2026 ஞாயிற்றுக்கிழமை காலை 8:30 மணி முதல் ஆடிப்பூர
கஞ்சிக்கலச சிறப்பு பூசைகள் நடைபெற்று 11:00 மணியளவில்
கஞ்சிக்கலசம் வீதிவலம் நடைபெற்று சிறப்பு ஆராதனை நடைபெற்று
மகேஸ்வர பூசையுடன் முடிவடையும்.
அனைத்து சக்திகளையும்
அன்னையின் அருளைப்பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.
ஆடிப்பூரகஞ்சி எடுப்பவர்கள் முன்கூட்டியே அறிவித்தும்
பதிவுசெய்யலாம்.
அன்னைக்கு வேண்டிய பூ, தேசிக்காய் மற்றும்
பூசைப்பொருட்கள் வாங்கிக் கொடுத்து
அன்னையின் ஆசியைப் பெற்றுக்கொள்ளலாம்.
21-08-2026 வெள்ளிக்கிழமை மாலை வரல'மி பூசை சிறப்பான
முறையில் நடைபெறும் அனைவரும் பங்குபற்றி அன்னையின்
அருளாசியைப் பெற்றுக்கொள்ளவும்.
தொண்டு செய்பவர்களும் பங்குபற்றலாம்.

80E நாஸ்டீன் வீதி ஸ்காபரோ கனடா
தொடர்புகளுக்கு: 647-436-9647



**Carefirst Family Health Team**

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24





# மூதூர் நிவாரணப் பணியாளர்கள் படுகொலைக்கு இலங்கை அரசிடம் நீதி கோரும் ஐ.நாவின் நிபுணர்கள்!

- பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீட்டை வழங்குமாறும் வலியுறுத்து!

திருகோணமலை - மூதூரில் 17 நிவாரணப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உண்மையையும் நீதியையும் இழப்பீட்டையும் காலதாமதமின்றி உடனடியாக வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் இலங்கை அரசை வலியுறுத்திக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி, இலங்கை இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல்கள் தீவிரமடைந்திருந்த சூழலில், மூதூரில் பிரான்ஸ் தொண்டு நிறுவனமான “ஏசிஎப்” அலுவலக வளாகத்தில் 17 நிவாரணப் பணியாளர்கள் கொடூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டனர். பெரும்பான்மையானோர் தலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் கொல்லப்பட்டிருந்தமையுடன், அக்காலகட்டத்தில் அப்பகுதி மக்களுக்கு அத்தியாவசிய குடிதண்ணீர் மற்றும் சுகாதார சேவைகளை வழங்கி வந்த ஒரே சர்வதேச தொண்டு நிறுவனமாக ஏசிஎப் மாத்திரமே செயற்பட்டு வந்தது.

இச்சம்பவம் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஐ.நா. நிபுணர்கள், கொல்லப்பட்டவர்கள் எவரும் ஆயுதம் ஏந்திய போராளிகள் அல்லவென்றும், மோதலில் சிக்கிய பொதுமக்களுக்கு உயிர்காக்கும் உதவிகளை வழங்கி வந்த மனிதநேயப் பணியாளர்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். நிவாரணப் பணியாளர்கள் மீதான இத்தாக்குதலானது சர்வதேச மனிதநேய விதிகளுக்கு முரணானது மட்டுமன்றி, மோதலால் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான மக்களுக்குச் சென்றடைய வேண்டிய அத்தியாவசிய உதவிகளையும் முற்றாக முடக்கியதாக அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த 2015 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் இலங்கை குறித்த விசாரணை அறிக்கை உட்படப் பல்வேறு சர்வதேச விசாரணைகள், இப்படுகொலைக்கு இலங்கைப் பாதுகாப்புப் படையினரே பொறுப்பு என நம்புவதற்குப் போதுமான ஆதாரங்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ளன. இருப்பினும், இலங்கையின் உள்நாட்டு விசாரணை ஆணைக்குழுக்கள் போதிய சாட்சியமின்மை, சாட்சிகளுக்கான பாதுகாப்பின்மை மற்றும் அரசியல் தலையீடுகள் காரணமாகத் தோல்வியடைந்தன.

குறிப்பாக, 2008 ஆம் ஆண்டு இந்த விசாரணைகளைக் கண்காணித்த சர்வதேச சுயாதீன புகழ்பெற்ற நபர்கள் குழு, இலங்கை அரசிடம் அரசியல் விருப்பமின்மை நிலவுவதாகக் கூறி விசாரணைகளில் இருந்து விலகிக்கொண்டதை ஐ.நா. நிபுணர்கள் நினைவுகூர்ந்துள்ளனர். கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்கள் கடந்துவிட்ட போதிலும், இப்படுகொலைக்குக் காரணமானவர்கள் இதுவரை கைது செய்யப்படவோ அல்லது சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படவோ இல்லை. இந்தத் தொடர்ச்சியான தண்டனையின்மையானது பாதிக்கப்பட்ட குடும்பங்களின் ஆறாத துயரத்தை மேலும் நீட்டிப்பதுடன், நாட்டின் சட்டத்தின் ஆட்சியின் மீதான நம்பிக்கையையும் சீர்குலைத்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப்படுகொலையின் விளைவாக, காந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையப் பணிகள் மற்றும் கிணறுகள் சீரமைப்பு உள்ளிட்ட பல அத்தியாவசியப் பணிகள் தடைப்பட்டன. இதனால் அப்பகுதியில் இருந்த 3 இலட்சத்து 25 ஆயிரத்துக்கும் அதிகமான இடம்பெயர்ந்த மக்கள் பாதுகாப்பற்ற குடிதண்ணீர், ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் நீரினால் பரவும் நோய்களுக்கு ஆளாகினர். அத்துடன், இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து ஏற்பட்ட அச்ச சூழ்நிலையால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிவாரணப் பணியாளர்கள் வெளியேறியதுடன், 2009 ஆம் ஆண்டு போர் நிறைவடையும் வரை நிவாரணப் பணிகளுக்கான இடைவெளியும் பெருமளவில் சுருங்கியது.

உலகளவில் நிவாரணப் பணியாளர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வரும் தற்போதைய சூழலில், மூதூர் படுகொலை போன்ற கொடூரச் சம்பவங்களுக்குப் பொறுப்புக்கூறல் இல்லாமல் இருப்பது ஆபத்தான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும் என்று ஐ.நா. நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.


எனவே, மூதூர் படுகொலை தொடர்பில் உடனடியாகச் சுயாதீனமான, நடுநிலையான மற்றும் நம்பிக்கையான விசாரணைகளை மீள ஆரம்பிக்குமாறும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உரிய இழப்பீட்டை வழங்குமாறும் அவர்கள் இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளனர்.

# MORTGAGE

## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND

INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**

**416-908-5656**



Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**



கனடா-பிரம்ரன் அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்
ஆடிவேல் விழா 2026
25வது வருடமாக நடைபெறும்
தங்கரதப் பெருவிழா
எதிர்வரும் குரோதி வருஷம் August மாதம் 6,7,8ம் திகதிகளில் 25வது தடவையாக நடைபெறுகின்ற ஆடிவேல் பெருவிழா திருவருள் கைகூடியுள்ளது.
3 தினங்கள் 6,7,8ம் திகதிகளில் முருகப் பெருமானுக்கு அபிஷேகமும் விஷேட தீபாரா தனைகளும் பக்தி பூர்வமாக இசைநிகழ்ச்சிகளும் நடைபெறும் . 3வது நாளாகிய 8ம் திகதி சனிக்கிழமை மாலை 5:00 மணிக்கு முருகப் பெருமானுக்கு அபிஷேகமும் தொடர்ந்து திருவூஞ்சலில் எழுந்தருளி விஷேட தீபாரா தனையும் சண்முக அர்சனையும் , சுப்பசிங்கர் கலைஞர்களும் மற்றும் கனேடிய கலைஞர்களும் கலந்து சிறப்பிக்கின்ற நிகழ்வுகளும், மயில்நாட்டிய உபசாரத்தோடும் 20 க்கு மேற்பட்ட இலங்கை இந்திய நாதஸ்வர தவில் இசையோடு அழகிய மின்விளக்குகளினால் அலங்கரிக்கப் பட்ட தங்கரதத்தில் வீதி உலா வந்து வடக்கு வீதியில் சிறுவர்களை கொள்ளை கொள்ளும் வாண வேடிக்கைகளோடும் சண்முகப் பொருமான் பிராயச்சித்த அபிஷேகத்தோடு ஆடிவேல் பெருவிழா பூர்த்தியாகும். அனைவரும் கலந்து கொண்டு சண்முகப் பெருமானின் நல்லருள் பெற்று உய்வீர்களாக.
200 Advance Blvd, Brampton, ON L6T 4V4 | Tel: (905) 458-9701 | (416) 471-0255
www.srikatpagavinayagar.ca | www.srikatpagavinayagar.com
இங்ஙனம் தேவஸ்தான தர்மகர்த்தா கணகுக சிவத்தொண்டன் இரா விஜயநாதன்

# அநுரகுமார அரசுக்கு முட்டுக்கொடுக்கும் "தமிழரசு"

***"இலங்கையின் கணக்காய்வாளர் நாயகமாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவரை நியமிக்கும் அநுர குமார அரசாங்கத்தின் நகர்வுக்கு, அரசியலமைப்பு பேரவை உறுப்பினராக ஆதரவாக வாக்களித்தார் என்ற ஒற்றைக் காரணத்திற்காக, தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் பதவியிலிருந்து சிவஞானம் சிறீதரன் எம்.பி.யை நீக்கிய தமிழரசின் தலைமை இன்றோ அநுரகுமார அரசாங்கத்தின் ஒவ்வொரு நகர்வுக்கும் நிபந்தனையற்ற ஆதரவையும் "முட்டுக்கொடுக்கும்" அரசியலையும் மிக நேர்த்தியாக வழங்கி வருகிறது."***

--------------------------------------------------------------- **கே.பாலா -**




தமக்கு விருப்பமில்லாத பாராளுமன்ற உறுப்பினருக்கு "கொள்கைவாதம்" பேசுவதும், அதிகாரம் கொண்ட அரசாங்கத்திற்கு "அனுசரணைவாதம்" பேசுவதும் தமிழரசுக்கட்சியின் தற்போதைய பாணியாக மாறியிருக்கிறது. ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியின் நியமன விவகாரத்தில் சிறீதரன் எடுத்த நிலைப்பாட்டை "கட்சிக் கொள்கைக்கு எதிரானது" என முத்திரையிட்டு, விளக்கம் கோரி, பாராளுமன்றக்குழுத்தலைவர் பதவியையும் பறித்த தமிழரசுக்கட்சித் தலைமை இன்று அதே இராணுவமயமாக்கலையும், தமிழ் மக்கள் சார்ந்த புறக்கணிப்புகளையும் தொடரும் அநுரகுமார அரசாங்கத்திற்குத் தூணாக நின்று "முட்டுக்கொடுப்பது" ஏன்? கட்சிக்குள்ளே ஒரு முகம், அரசாங்கத்திடம் இன்னொரு முகம் காட்டும் தமிழரசுக்கட்சியின் இந்த இரட்டை நிலைப்பாட்டின் பின்னணியில் உள்ள அரசியல் என்ன?

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் உட்கட்சி முரண்பாடுகள் மற்றும் அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடனான அணுகுமுறை குறித்து தமிழ் அரசியல் அரங்கில் தற்போது தீவிர விவாதங்கள் எழுந்துள்ளன. தமிழ் மக்களின் முதன்மையான கோரிக்கைகளான 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துதல், அரசியல் தீர்வு, காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினைக்குத் தீர்வு, காணி விடுவிப்பு மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை போன்ற விடயங்களில் அநுரகுமார அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்றாத, தெளிவான உறுதியான வாக்குறுதிகளை வழங்காத நிலையிலும், தமிழரசுக் கட்சித் தலைமை அரசாங்கத்திற்கு நிபந்தனையற்ற வகையில் ஆதரவுப் போக்கை கையாள்வதாக கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினராக செயற்பட்ட தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவரான சிறீதரன் எம்.பி., கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியை நியமிப்பது தொடர்பான வாக்கெடுப்பில் அரசாங்கத்தின் முன்மொழிவுக்கு ஆதரவாக செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டை. தமிழரசுக்கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம், பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான "தான்தோன்றி" புதிய தலைமை முன்வைத்து பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியிலிருந்து சிறீதரனை நீக்கி கட்சி ரீதியாக பழிவாங்கினாலும் இந்த "தான்தோன்றி" தலைமை ஆரம்பம் முதலே அநுரகுமார அரசாங்கத்திற்கு மறைமுக ஆதரவு வழங்கி வந்த நிலையில் தற்போது அண்மைய இரு சம்பவங்களில் நேரடியாகவே தமது அநுரகுமார அரசாங்க ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது.

இதில் ஒன்று 2026 ஜுலை 5 மற்றும் 6 ஆகிய இரு தினங்களில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதல்கள் காரணமாக சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கைதிகள் என 32 பேர் உயிரிழந்ததுடன், மேலும் சிலர் பலத்த காயமடைந்தனர். இதன் போது விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தனது பொறுப்புகளை நிறைவேற்றத் தவறியதாக குற்றஞ்சாட்டி எதிர்க்கட்சியினரால் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. ஆனால் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையெழுத்திட தமிழரசுக்கட்சி எம்.பி.க்களுக்கு அதன் தலைமையும் பாராளுமன்றக் குழுத்தலைவரான இரா. சாணக்கியன் எம்.பி.யும் அனுமதிக்கவில்லை.

அத்துடன் இந்த நம்பிக்கையிலாப் பிரேரணை மீதான விவாதம் கடந்த 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற நிலையில் விவாதத்தில் பேசிய தமிழரசின் தேசியப்பட்டியல் எம்.பி.யான சத்தியலிங்கம் "சிறைச்சாலைகளில் இந்த நிலைமைகளுக்கு பொறுப்பு கூற வேண்டியது தற்போதைய நீதி அமைச்சர் மட்டுமா?. இதற்கு முன்பிருந்த நீதி அமைச்சர்கள் பொறுப்பு இல்லையா? இதற்கு முன்னர் சிறைச்சாலைகளில் இந்த நிலைமை காணப்படவில்லையா? கடந்த காலங்களில் சிறைச்சாலைகளில் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்பட்ட போது எந்த அரசாங்கம், எந்த நீதிஅமைச்சர் பொறுப்புக் கூறினார்? அவ்வாறான பிழைகளை ஏற்றுக்கொண்டு பதவியில் இருந்து நீதிஅமைச்சர்கள் விலகியிருக்க வேண்டும். ஆனால் இதற்கு முன்னர் அவ்வாறு நடந்ததில்லை. எனினும் இந்த அரசாங்கத்தின் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார சம்பவம் நடைபெற்று சிறிது நேரத்தில் அதனை பொறுப்பேற்பதாக கூறினார். இதனை நாங்கள் பாராட்டுகின்றோம்" என்று புகழாரம் சூட்டினார்.

இந்நிலையில் விவாதத்தின் முடிவில் வாக்கெடுப்பு இடம்பெற்றது இந்த வாக்கெடுப்பில் பிரேரணைக்கு ஆதரவாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி, பொதுஜன பெரமுன, புதிய ஜனநாயக முன்னணி, சர்வஜன அதிகாரம் ஆகிய கட்சிகளும் அர்ச்சுனா இராமநாதன் தலைமையிலான சுயேட்சைக்குழு 17 உம் வாக்களித்தன. இதேவேளை எதிர்க்கட்சிகள் பக்கத்திலுள்ள தமிழரசுக் கட்சி, செல்வம் அடைக்கலநாதன் எம்.பி பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனநாயகத்தமிழ் தேசிய கூட்டணி, ஜீவன் தொண்டமான் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசியக்கட்சி, காதர் மஸ்தான் எம்.பியின் தொழில்கட்சி ஆகியவற்றுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சித் தலைவர்களான மனோகணேசன். திகாம்பரம். இராதாகிருஷ்ணன் ஆகியோர் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

இரண்டாவது தற்போதைய அநுரகுமார அரசாங்கத்தின் தன்னிச்சையான செயற்பாடுகள் காரணமாக நீதித்துறையின் இறைமை கடுமையான சவாலுக்கு உள்ளாகி உள்ளது என்று தெரிவித்து, அது தொடர்பாக எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதானிகளின் விசேட கூட்டம் ஒன்று கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை கொழும்பில் எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்றது இதற்கான அழைப்பு தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் அக்கட்சி பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா சாணக்கியனுக்கும் எதிர்க்கட்சித் தலைவரினால் விடுக்கப்பட்டது. ஆனால் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவதில்லை என்று தமிழரசின் தலைமை தீர்மானித்தது. தமிழரசு புறக்கணித்த இந்த அநுரகுமார அரசாங்கத்திற்கு எதிரான எதிர்க் கட்சிகளின் மாநாட்டில் அனைத்து எதிர்க்கட்சிகளும் அதன் தலைவர்கள், பிரதானிகளும் பங்கேற்ற நிலையில் தமிழரசுக்கட்சியும் தமிழரசின் புதிய கூட்டாளியான செல்வம் அடைக்கலநாதன் எம். பியின் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் மட்டுமே பங்கேற்கவில்லை.

ஆக அநுரகுமார அரசாங்கத்திற்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் அமைந்த நீதி அமைச்சருக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையில்லாப் பிரேரணை, அநுரகுமார அரசாங்கத்திற்கு எதிரான எதிர்க்கட்சிகளின் கூட்டு ஆகிய இரண்டையும் புறக்கணித்த தமிழரசுக்கட்சி தாங்கள் அமைத்துள்ள மலையக, முஸ்லிம் கட்சிகளை உள்ளடக்கிய 6 தமிழ் கட்சிகளின் கூட்டு சார்பில் கடந்த ஆகஸ்ட் 3 ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமாரவை சந்தித்தனர். இவ்வாறாக வடக்கின் அரசியல் அரங்கில் இன்று தமிழரசுக்கட்சி அரங்கேற்றி வரும் நிகழ்வுகள், "சாணக்கியம்" என்ற போர்வையில் தமிழரசுக்கட்சிக்குள் மூடப்பட்டிருக்கும் முரண்பாடுகளின் உச்சமாக உருமாறி வருகின்றது.

அநுரகுமார அரசாங்கத்திற்கு எதிரான எதிர்க்கட்சிகளின் நகர்வுகளின்போது, அரசாங்கத்திடம் "159" என்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது என்ற சாட்டுப்போக்கை கூறி "இணக்க அரசியல்" என்ற போர்வையில் அநுரகுமார அரசாங்கத்துக்கு "முட்டுக்கொடுக்கும்" போக்கையே தமிழரசின் தற்போதைய "தான்தோன்றி" தலைமைத்துவம் கையாள்கிறது. புதிய அரசாங்கத்துடன் ஆரம்பத்திலேயே மோதல் போக்கைக் கடைப்பிடிக்காமல், கலந்துரையாடல்கள் மற்றும் இராஜதந்திர வழிகள் மூலம் தமிழ் மக்களின் அன்றாட மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதே தற்போதைய சூழலில் சாணக்கியமான அணுகுமுறை என்ற காரணத்தை தமிழரசின் இந்த "தான்தோன்றி" தலைமை முன்வைத்து வருகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் திணைக்களம், வனவள திணைக்களம் மற்றும் வனஜீவிகள் திணைக்களம் ஆகியவற்றின் ஊடாக தமிழர்களின் பாரம்பரிய நிலங்களை "தொல்பொருள் மையங்கள்" அல்லது "பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள்" என அடையாளப்படுத்தி ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகள் தொடர்கின்றன. தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் குறிப்பாக முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தமிழர் பிரதேசங்கள், இந்து ஆலயங்கள் அல்லது பாரம்பரிய இடங்களுக்கு அருகில் புதிய பௌத்த விகாரைகள் மற்றும் புத்தர் சிலைகள் நிறுவப்படுவது தொடர்கின்றது.

குருந்தூர் மலை மற்றும் வெடுக்குநாறி மலை வரலாற்றுச் சிறப்புமிக்க வழிபாட்டுத் தலங்களில் தமிழ் மக்கள் சுதந்திரமாகச் சென்று வழிபாடு செய்வதில் தொல்பொருள் திணைக்களம் மற்றும் பொலிஸாரின் தடைகள் அல்லது கட்டுப்பாடுகள் நீடிக்கின்றன, கன்னியா வெந்நீரூற்றுப்பகுதியிலும் பௌத்த விகாரைக்கான அடிக்கல் அண்மையில் நாட்டப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கில் உள்ள தனியார் மற்றும் பொது நிலங்களில் அமைந்துள்ள இராணுவ முகாம்களை முழுமையாக அகற்றி, உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் செயல்முறை எதிர்பார்த்த வேகத்தில் நடைபெறவில்லை.

தமிழ் மக்களுக்கான அரசியலமைப்பு ரீதியான அதிகாரப் பரவலாக்கம், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது அல்லது மாகாண சபை தேர்தல்களை உடனடியாக நடத்துவது குறித்த நகர்வுகள் இன்னும் இல்லை. பௌத்த மதத்திற்கு அரசியலமைப்பில் அளிக்கப்பட்டுள்ள முதன்மை அந்தஸ்தை மாற்றியமைக்க முடியாது என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்கின்றது, காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினைக்குத் தீர்வு, காணி விடுவிப்பு மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் ,தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை என்ற எந்தவொரு உறுதிமொழியையும் அநுரகுமார அரசாங்கம் இதுவரையில் நிறைவேற்றவில்லை.



*(தொடர்ச்சி 17 பக்கம்)*

உலக செய்திகள் World News

# தமிழக அரசின் வேளாண் நிதிநிலை அறிக்கை தொலைநோக்கு பார்வை கொண்டது என்கிறார் முதலமைச்சர் விஜய்!



தொலைநோக்கு பார்வையுடன் கூடிய வேளாண் நிதிநிலை அறிக்கையென முதல்-அமைச்சர் விஜய் கூறினார். 2026-27ஆம் நிதியாண்டுக்கான தமிழக வேளாண் நிதிநிலை அறிக்கை பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது. வேளாண் அமைச்சர் வினோத் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளன. வேளாண் நிதி அறிக்கையை தாக்கல் செய்த வேளாண் அமைச்சர் வினோத் சுமார் இரண்டு மணி நேரம் உரையாற்றினார். காலை 9.31 மணிக்கு நிதிநிலை அறிக்கை உரையை வாசிக்கத் தொடங்கிய அமைச்சர் வினோத் 11.38க்கு உரையை நிறைவு செய்தார்.

இந்தநிலையில், முதல்-அமைச்சர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டின் வளர்ச்சியை இலக்காகவும், மக்கள் நலனை மையமாகவும் கொண்டு, ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றே மாதங்களில் அனைவரும் பாராட்டும் வகையில் 2026 - 27ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்துள்ள நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை அமைச்சர் மரிய வில்சன் வேளாண்மை நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்துள்ள வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் வினோத் அவர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள் மற்றும் பாராட்டுகள்.

தொலைநோக்குப் பார்வையுடன்கூடிய திருத்திய நிதிநிலை அறிக்கையானது மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், திருநர்கள், தொழிலாளர்கள், மீனவர்கள், நெசவாளர்கள், தொழில்முனைவோர், அரசுப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு மக்களின் முன்னேற்றத்திற்கும் புதிய நம்பிக்கையை அளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

வேளாண்மை நிதிநிலை அறிக்கையானது, தமிழ்நாட்டின் வேளாண் வளர்ச்சியோடு, அதன் தொழில்சார்ந்த கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு, பால்வளம், உணவுப் பொருட்களைப் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் போன்ற தொழில்களையும் மேம்படுத்துவதோடு, அனைத்துத் தரப்பு விவசாயிகளின் நலனையும் வாழ்வாதாரத்தையும் மேலும் வலுப்படுத்தும் வகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. வளமான தமிழ்நாட்டை நோக்கிய நமது வெற்றிப் பயணம் தொடரட்டும்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பழனி ரூ.100 கோடி நில மோசடி வழக்கில் சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் கைது செய்யப்பட்டுள்ளார்



பழனி ரூ.100 கோடி நில மோசடி வழக்கில் சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் கைது செய்யப்பட்டுள்ளார். பழனி தண்டாயுத பாணி சுவாமி மடத்திற்கு சொந்தமாக 1.45 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிலத்தை கடந்த மாதம் 6ஆம் தேதி தனிநபர்கள் பெயரில் சட்டவிரோதமாக பத்திரப்பதிவு செய்யப்பட்டிருந்த அதிர்ச்சி தகவல் வெளியானது. அதாவது ரூ100 கோடி மதிப்பிலான நிலத்தை வெறும் ரூ2 கோடிக்கு வெள்ளத்துரை, சேதுபதி ஆகியோருக்கு பத்திரப்பதிவு செய்யப்பட்டதாக பழனி மலையடிவார காவல்துறை வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த நிலையில் பத்திரப்பதிவை நீதிமன்றம் ரத்து செய்தது. மேலும் இந்த வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டது. பழனி சார்பதிவாளர்கள் இந்த நிலத்தை முறைகேடாக பத்திரப்பதிவு செய்ய மறுத்து அவர்கள் விடுப்பில் சென்றனர்.

இதனால் கொடைக்கானலில் உள்ள சார்பதிவாளர் ஜஸ்டினை பழனி அலுவலகத்திற்கு அழைத்து வந்து முறைகேடான பத்திரப்பதிவு செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து ஜஸ்டின் மணிகண்டன் முன் ஜாமீன் கோரி மனு தாக்கல் செய்தார். அவருக்கு இடைக்கால ஜாமீன் அளித்திருந்த நிலையில், ஜாமீன் மனு மீதான இறுதி தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங்கியது. அதில், பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவிலின் பழனி முருகன் கோவில் கட் டுப்பாட்டில் உள்ள ஒரு மடத்துக்கு சொந்தமான நிலத்தின் மதிப்பு சுமார் 100 கோடி ரூபாய் என்று கூறப்பட்டு உள்ளது. அந்த சொத்தை முறைகேடாக பத்திரப்பதிவு செய்துள்ளனர். அதன்பேரில் பதிவான வழக்கை திண்டுக்கல் சி.பி. சி.ஐ.டி. காவல்துறை விசாரிக்கின்றனர். இதில் இந்த சொத்தின் ஆவணங்களை போலியாக தயாரிப்பதில் அன்வர்தீன் என்பவர் தீவிரமாக ஈடுபட்டு இருந்ததும், 1998-ம் ஆண்டு முதலே சம்பந்தப்பட்ட சொத்தை அபகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்ததும் தெரியவந்தது.

இந்த வழக்கில் அன்வர்தீன் கைது செய்யப்பட்டு உள்ளார். இந்த சொத்தை முறைகேடாக பதிவு செய்வதற்கு பழனி சார்பதிவாளர் பாலசுந்தருக்கு, அன்வர்தீன் தரப்பில் இருந்து அழுத்தம் கொடுத்ததாகவும் கூறப்படுகிறது.விற்பனையாளர் அவசர, அவசரமாக அந்த சொத்தை மொத்தம் ரூ.2 கோடிக்கு விற்றுள்ளார். இதுவும் அந்த ஆவணத்தின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகத்தை எழுப்புகிறது. இதுவும் மனுதாரருக்கு எதிராக அமைகிறது.

மேலும் இந்த ஆவண பதிவில் ஈடுபட்ட அதிகாரிகள், அறங்காவலர்கள் மீதும் குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்த குற்றச்சாட்டு குறித்தும் விரிவான விசாரணை தேவைப்படுகிறது. இந்த சூழ்நிலையில் மனுதாரருக்கு முன் ஜாமீன் வழங்கினால் அது விசாரணையை பாதிக்கும். பழனி சார்பதிவாளர் பாலசுந்தரால் பதிவு செய்யப்பட்ட குறிப்புகளுக்கு எவ்வித மதிப்பும் அளிக்காமல் கொடைக்கானலில் இருந்து பொறுப்பு சார் பதிவாளராக வந்திருந்த ஜஸ்டின் மணிகண்டன் நேரடியாக செயல்பட்டு பதிவு நடவடிக்கையை முடித்து இருக்கிறார். இது குற்றம் சாட்டப்பட்ட மற்றவர்களுக்கு உதவும் நோக்கில், அவர் வேண்டுமென்றே அந்த ஆவணத்தை பதிவு செய்துள்ளார் என்பதை காட்டுகிறது. எனவே அவரிடம் காவலில் வைத்து விசாரணை நடத்த வேண்டியது அவசியமாகிறது.எனவே இந்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. ஜஸ்டின் மணி கண்டனுக்கு வழங்கிய இடைக்கால ஜாமீன் ரத்து செய்யப்படுகிறது. என்று உத்தரவிட்டது. முன் ஜாமீன் மனு தள்ளுபடியான நிலையில் சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் கைது செய்யப்பட்டுள்ளார். நில மோசடி வழக்கில் ஏற்கனவே 4 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் ஜஸ்டின் மணிகண்டன் ஐந்தாவதாக கைது செய்யப்பட்டுள்ளார்.

# தாய்லாந்தில் மின்னல் தாக்கியதில் உதைப்பந்தாட்ட வீரர் மைதானத்திலேயே உயிரிழந்தார்

தாய்லாந்தில் மின்னல் தாக்கியதில் கால்பந்து வீரர் மைதானத்திலேயே உயிரிழந்தார். தென் தாய்லாந்தில் உள்ள சுங்கை கோலோக் பகுதியில் சாம்கொல்ட்ஸ் - அபு எக்ஸ் நொங் சிரின் அணிகளுக்கு இடையே கால்பந்து போட்டி நடந்தது. சன்டிபாப் விளையாட்டரங்களில் போட்டி நடந்தது. அப்போது சாம்கொல்ட்ஸ் அணியின் 24 வயது வீரரான சோவ்யான் அவேய் மீது திடீரென மின்னல் தாக்கியது. மின்னல் தாக்கியதில் நிலைகுலைந்த அவர், மைதானத்திலேயே சுருண்டு விழுந்தார். சக வீரர்கள் மற்றும் அவசர மருத்துவ குழுவினர் அவரை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். மின்னல் தாக்கியதில் கால்பந்து வீரர் ஒருவர் உட்பட 12 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. கால்பந்து விளையாடிக் கொண்டிருந்தபோது மின்னல் தாக்கியதில் மைதானத்திலேயே வீரர் உயிரிழந்த சம்பவம் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.




# எலான் மஸ்க் நிறுவன ரொக்கெட் நிலவின் மேற்பரப்பில் மோதியது



எலான் மஸ்க் நிறுவனத்தின் பால்கன்-9 ராக்கெட் நிலவின் மேல்பரப்பில் மோதியது. இந்த நிகழ்வை அமீரகத்தின் வானியல் மையம் கண்காணித்து எடுத்த புகைப்படம் தூசிப்படலம் காரணமாக தெளிவில்லாமல் உள்ளது. இதுகுறித்து அபுதாபி வானியல் மையம் வெளியிட்டுள்ள செய் தி க் குறி ப் பி ல் கூறியிருப்பதாவது: கடந்த 2025-ம் ஆண்டு பயர்பிளை ஏரோஸ்பேஸ் என்ற நிறுவனத்தின் நிலவு பயண லேண்டர் வாகனங்களை ஸ்பேஸ்-எக்ஸ் என்ற எலான் மஸ்க் நிறுவனத்தின் பால்கன்-9 ராக்கெட் சுமந்து சென்றது. அதன் பிறகு நிலவுக்கான லேண்டர்களை அதன் பாதைக்கு சேர்த்தபிறகு புவி மற்றும் நிலவு ஈர்ப்பு விசை காரணமாக நீண்ட சுற்றுப்பாதையில் வந்து கொண்டு இருந் தது. அந்த ஆண்டின் ஜனவரியில் விண்வெளிக்கு சென்ற ராக்கெட்டின் 2-ம் கட்ட பாகம் தொடர்ந்து அங்கேயே மிதந்து கொண்டு இருந்தது. சுமார் 4 ஆயிரம் கிலோ எடையுள்ள, ஒரு பேருந்து அளவு பருமன் கொண்ட இந்த ராக்கெட் பாகமானது மணிக்கு 8 ஆயிரத்து 690 கி.மீ. வேகத்தில் கட்டுப்பாடு இல்லாமல் நிலவை நோக்கி சென்றது. அதில் அமீரக நேரப்படி நேற்று காலை 10.30 மணியளவில் நிலவின் மீது மோதும் என அபுதாபி அல் கதம் வானியல் மையம் கணக்கிட்டது. அதேபோல் சரியாக அதேநேரத்தில் நிலவின் மேல் விளிம்பில் உள்ள ஜன்ஸ்டீன் கிரேட்டர் என்ற பகுதியில் பயங்கரமாக மோதியது. இந்த மோதல் திட்டமிடப்படாத ஒன்று என ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிலவில் ராக்கெட் மோதும் நிகழ்வை அபுதாபி அல் கதம் வானியல் மையம் தொடர்ந்து கண் காணித்து வந்தது. பகலில் வெளிச்சம் மற்றும் நிலவு அடிவானத்தில் மிக குறைந்த உயரத்தில் இருந்ததாலும், வெளிமண்டல ஒளி விலகல் காரணமாக புகைப்படம் எடுப்பதில் சிரமம் ஏற்பட்டது. மோதல் நடப்பதற்கு ஒரு நிமிடத்திற்கு முன் முதன்மை தொலைநோக்கி மூலம் புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. இருந்தாலும் மோதலின்போது பெரும் புழுதி காரணமாக அதன் வெடிப்பு மற்றும் வெளிச்சத்தை பதிவு செய்ய முடியவில்லை. தூசிப்படலம் அதிகமாக வானில் இருந்ததால் தெளிவான புகைப்படங்களை எடுக்க முடியவில்லை. அப்போது நிலவின் நிலப்பரப்பை ராக்கெட் மோதும்போது சுமார் 1.100 டன் எடையுள்ள நிலவு பாறைகள் மற்றும் மண் தூசியாக விண்ணில் கிளம்பி இருக்கலாம் என கருதப்படுகிறது. நிலவின் குறைந்த புவியீர்ப்பு விசை காரணமாக இந்த தூசிகள் சுமார் 10 அடி உயரம் வரை மேலே எழும்பி இருக்கலாம் என தெரிகிறது. உலகம் முழுவதிலும் இதன் மோதல் புகைப்படங்களை வைத்து பல்வேறு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகிறது.

# சிறை மோதல்கள் அலையாக மாறுமா?

## – மஹர கலகம் திட்டமிட்ட பலவீனப்படுத்தும் செயற்பாடாக இருக்கலாம் என்கின்றார் நீதி அமைச்சர் ஹர்ஷன

சிறைச்சாலை மோதல்கள் அலையாக உருவெடுக்குமா என்பது குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்றும், சிறைச்சாலை கட்டமைப்பைத் திட்டமிட்ட வகையில் பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது என்றும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடுகள் அமைச்சர் ஹர்'ன நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வில் மஹர சிறைச்சாலை மோதல் தொடர்பில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

”மஹர சிறைச்சாலையில் கடந்த 1 ஆம் திகதி மாலை 3.45 மணியளவில் மூன்று கைதிகள் சிறைச்சாலையின் கூரையின் மீது ஏறி கூச்சலிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சிறைச்சாலை அதிகாரி அங்கு சென்று அவர்களுடன் பேச்சு நடத்திய போதிலும், ஒரே நேரத்தில் சுமாராக ஆயிரம் கைதிகள் ஒன்றுகூடி கலகம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளனர்.

இதனைக் கட்டுப்படுத்த சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் ஆயுதங்களைப் பாதுகாப்பாக மறைத்துவிட்டு பிரதான இரும்பு வாசல்களை மூடியுள்ளனர். எனினும், கைதிகள் கதவுகள் மீது கற்களால் தாக்குதல் நடத்தியதுடன், சமையலறை, உணவு உண்ணும் இடம், வைத்தியசாலை, பதிவுப் பிரிவு மற்றும் அலுவலகப் பகுதிகளைச் சேதப்படுத்தியும் தீ வைத்தும் அழித்துள்ளனர். பின்னர், பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் இராணுவத்தின் ஒத்துழைப்புடன் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

நீர்கொழும்பு சிறைச்சாலை மோதல் கைதிகளுக்கு இடையிலான முரண்பாடாக இருந்தபோதிலும், மஹர சிறைச்சாலையில் அவ்வாறான தன்மை காணப்படவில்லை. ஒரே கட்டத்தில் ஆயிரம் பேர் ஒன்றுகூடியமை சந்தேகத்துக்குரியது.



கைதிகள் கூண்டுகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுத்தப்படவில்லை. மாறாக, சமையலறை, உணவு உண்ணும் இடம் மற்றும் வைத்தியசாலை போன்றவையே திட்டமிட்டுத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

மஹர சிறைச்சாலை மோதலுக்கு வெளியாள்களின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளதா என்பது தொடர்பில் பல்வேறு கோணங்களில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தற்காலிக ஏற்பாடாக வேறு சிறைச்சாலைகளில் உணவு சமைக்கப்பட்டு மஹர சிறைக் கைதிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

சிறைச்சாலையின் சொத்துகளுக்குத் தீ வைத்து அழிக்கப்பட்டமை மக்களின் வரிப்பணத்தையே பாதிக்கின்றது என்பதைக் கைதிகளின் உறவினர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

சிறைச்சாலை கட்டமைப்பில் நிலவும் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண எனது தலைமையில் அமைச்சரவைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும், சிறைச்சாலை மோதல்கள் அலையாக உருவெடுக்குமா என்பது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. மூன்று சிறைச்சாலைகள் தொடர்பில் விசேட தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதற்கமைய சிறைச்சாலைகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.” - என்றார்.

# ”இலங்கை அரசே! எமது பூர்வீக நிலங்களை உடனடியாக எம்மிடம் ஒப்படை!”

## – மன்னாரில் ஜனநாயக கவனயீர்ப்பு போராட்டத்திற்கு அழைப்பு.

(மன்னார் நிருபர்)

“எமது பூர்வீக நிலங்களை உடனடியாக எம்மிடம் ஒப்படையுங்கள்“ என்ற கோரிக்கையை வலியுறுத்தியும், நீண்ட காலமாக தமது பூர்வீக நிலங்களை மீட்டெடுப்பதற்காக தொடர்ந்து போராடி வரும் மக்களுக்கு ஒற்றுமையையும் ஆதரவையும் வெளிப்படுத்தியும், 7 ம் திகதி வெள்ளிக்கிழமை (7) காலை 9.30 மணிக்கு மன்னார் நகர சுற்றுவட்டத்துக்கு முன்பாக ஜனநாயக கவனயீர்ப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.

காணி இழந்த மக்களின் குரல் ஏற்பாட்டில், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் அனுசரணையில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டம், யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு, முல்லைத்தீவு கேப்பாபுலவு மற்றும் மட்டக்களப்பு மயிலத்தமடு-மாதவனை பகுதிகளில் தமது பூர்வீக காணிகளை மீட்டெடுப்பதற்காக பல ஆண்டுகளாக இடையறாது போராடி வரும் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் முன்னெடுக்கப்படுகிறது.

, மனித உரிமைகள், காணி உரிமைகள், சமூக நீதி மற்றும் ஜனநாயகத்தை மதிக்கும் அனைத்து சிவில் சமூக அமைப்புகள், மக்கள் அமைப்புகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் இந்நிகழ்வில் தங்களது மேலான பங்களிப்பை வழங்குமாறு ஏற்பாட்டு குழு அழைப்பு விடுத்துள்ளது.

அத்துடன், மன்னாருக்கு வர இயலாத நண்பர்கள் மற்றும் அமைப்புகள் தங்களது மாவட்டங்களில் குறிப்பாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் ஆதரவு கவனயீர்ப்பு போராட்டங்களில் பங்கேற்று, நில உரிமைக்காகப் போராடும் மக்களின் நீதியான கோரிக்கைக்கு ஒற்றுமையையும் ஆதரவையும் வெளிப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.




(15 பக்கம் தொடர்ச்சி)

# அநுரகுமார அரசுக்கு முட்டுக்கொடுக்கும் “தமிழரசு”

---

இவ்வாறான நிலையில் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைப் பிரச்சினைகளுக்கோ, அரசியல் தீர்வுகளுக்கோ எந்தவித தீர்வுகளையும் வழங்காத வாக்குறுதிகளை நிறைவேற்றாத அநுரகுமார அரசாங்கத்திற்கு, தமிழரசு எந்த நிபந்தனையும் இன்றி சிவப்புக் கம்பளம் விரித்து வருகிறது. இராணுவ அதிகாரி நியமனத்தில் சிறீதரனின் ஆதரவை ”கொள்கைத் துரோகம்” எனச் சித்திரித்த தலைமை, அதே அரசாங்கம் தமிழ் நிலங்களில் மேற்கொள்ளும் நிர்வாக மற்றும் அரசியல் ஆதிக்கங்களை மௌனமாக வேடிக்கை பார்ப்பது எந்த வகையான கொள்கைவாதம்? தமக்குச் சாதகமில்லாத சிறீதரன் எம்.பி.க்கு “கொள்கைவாதம்“ பேசி பதவிப் பறிப்பு நடத்துவதும், தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இன்னமும் எந்தவொரு தீர்வும் தராத அநுரகுமார அரசாங்கத்திற்கு “சாணக்கியம்“ என்ற பெயரில் முட்டுக்கொடுப்பதும் ஒருபோதும் நேர்மையான அரசியலாக முடியாது.

இலங்கையின் கணக்காய்வாளர் நாயகமாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவரை நியமிக்கும் அநுர குமார அரசாங்கத்தின் நகர்வுக்கு, அரசியலமைப்பு பேரவையில் அதன் உறுப்பினராக ஆதரவாக வாக்களித்தார் என்ற ஒற்றைக் காரணத்திற்காக, தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் பதவியிலிருந்து சிவஞானம் சிறீதரன் எம்.பி. தமிழரசின் தலைமையால் நீக்கப்பட்டதுடன் அநுரகுமார அரசாங்கத்தின் ”இராணுவ மயமாக்கலை சகித்துக்கொள்ள முடியாது” என ஒழுங்கு நடவடிக்கை வாளைச் சுழற்றிய அதே தமிழரசின் தலைமை, இன்றோ அநுரகுமார அரசாங்கத்தின் ஒவ்வொரு நகர்வுக்கும் நிபந்தனையற்ற ஆதரவையும் “முட்டுக்கொடுக்கும்“ அரசியலையும் மிக நேர்த்தியாக வழங்கி வருகிறது.

மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்றுவிட்டு, உட்கட்சிப் பகையைத் தீர்ப்பதற்கு ஒரு நீதியையும், ஆட்சியாளர்களின் தயவைப் பெறுவதற்கு வேறொரு நீதியையும் கையாளும் இந்த இரட்டை நிலைப்பாடு, தமிழரசுக்கட்சி தார்மீக ரீதியாகக் கட்டியெழுப்பிய கொள்கை அடித்தளத்தையே தகர்த்து வருகிறது. தமிழ் மக்களுக்கு அதிகாரத் தலைமைகளுக்கு வசதியான “இணக்க அரசியல்“ அல்ல. மாறாக, உரிமைகளை உரக்கப் பேசும் உறுதியான கொள்கை அரசியலே தேவை. கட்சிக்குள்ளே ஒரு கொள்கைப் பேச்சும், அரசாங்கத் தரப்பிடம் வசதியான அனுசரணைப் போக்கும் காட்டும் தமிழரசுக்கட்சியின் இந்த ”இரட்டை நிலைப்பாடு” தமிழரசின் வாக்கு வங்கியின் நம்பிக்கையை சிதைத்து வருகிறது.

---

Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

KANAGAAMBIKAI
Pawn Brokers





32 வருட சேவைகள்

கனகாம்பிகை

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடகு!

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198


SURUVIL
PEOPLE'S ASSOCIATION
Summer
Get-together
A DAY OF FOOD, FUN, FRIENDSHIP & MEMORIES!
FAMILIES
FRIENDS
ALL
WELCOME!
DATE
SATURDAY
AUGUST 15/26
TIME
9:00 AM – 8:00 PM
PLACE
COLONAL
DANFORTH PARK
AREA 2
Menu
STARTING WITH
• Dosa & Sambal
• Bread & Sambal
• Doughnut
• Coffee
LUNCH
• Odiyal Kool
• Rice
• Mutton Curry
• Chicken Curry
• Veg Curry
• And many more delicious dishes!
FINISHING WITH
Koththu Rotti
Come and enjoy a day filled with
DELICIOUS FOOD, FUN ACTIVITIES,
LAUGHTER & GREAT COMPANY!
DON'T MISS THIS
WONDERFUL COMMUNITY EVENT!
We look forward to celebrating with you!




20/20 CA$H RU$$H

- Western Union- Money Transfer, Payout, Bill Payments
- Buying Used Gold-Top Dollar paid
- Pawning
- Small Loans

நகைகள் திருத்தம் செய்து கொடுக்கப்படும்

இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள இலக்கங்களை கொண்ட வாடிக்கையாளர்கள் தயவுசெய்து எம்முடன் தொடர்பு கொண்டு அடவுகளை மீட்கவும்.

Kindly redeem the following pawn ticket number immediately

CR 129, 548, 174, 182, 297, 274, 283, 169, 351, 352, 404, 549, 558, 529, 537, 555, 915, 755, 760, 790, 911, 882, 847, 843, 708, 798, 800, 854, 1055, 2073, 649, 732, 738, 861, 703, 898, 948, 768, 766, 855, 844, 867, 879, 980, 518, 519, 634.

இலங்கையில் உள்ள உங்கள் உறவுகளுடன் குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்வதற்கான Pre-paid Top up ஐ எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



தொடர்புகளுக்கு :

**Tel : 416-291-CASH (2274)**

**Fax : 416-291-2276**

E-mail : 2020cashrusshcorp@gmail.com | www.2020cashrussh.ca

4049 Sheppard Ave., East Scarborough. ON. M1S 1S8

# இவ்வார ராசிபலன்

**07-08-2026 வெள்ளி தொடக்கம் 13-08-2026 வியாழன் வரையும்**



ஸ்ரீ ஸ்ரீ ப்ரத்யங்கிராதாச சுவாமிகள்
ஸ்தாபகர்
ஜெய் ப்ரத்யங்கிரா பீடம்
40.வெண்பாக்கம் கிராமம், சிங்கப்பெருமாள் கோவில்ரயில் வேகேட் (வழி), வெங்கடாபுரம் (அஞ்சல்), செங்கல்பட்டு (மா)- 603204.
தொடர்புக்கு WhatsApp: +917788994666


**மேஷம்:** தன்னம்பிக்கையும் வெற்றியும் அதிகரிக்கும் வாரமாக இது அமையும். உங்கள் முயற்சிகளுக்கு நல்ல பலன் கிடைத்து தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த வாய்ப்புகள் தேடி வரும். பணவரவு திருப்திகரமாக இருந்து, தடைபட்ட சில தொகைகள் கைக்கு வந்து நிம்மதி தரும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே ஒற்றுமை அதிகரிக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி கிடைக்கும். காதல் உறவுகளில் இருந்த சிறிய கருத்து வேறுபாடுகள் நீங்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், வேலைப்பளுவால் சோர்வு மற்றும் தூக்கமின்மை ஏற்படலாம். உணவு மற்றும் ஓய்வில் கவனம் செலுத்துங்கள். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்படுவார்கள். கோபத்தை தவிர்த்து பொறுமையுடன் நடந்துகொண்டால் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, ஆரஞ்சு. அதிர்ஷ்ட எண்: 1,9

அதிர்ஷ்ட நாள்: செவ்வாய், ஞாயிறு. இந்த வாரம் மேஷத்திற்கு 8/10 மதிப்பெண்

**ரிஷபம்:** அமைதியும் முன்னேற்றமும் தரும் வாரமாக இது அமையும். உங்கள் முயற்சிகளுக்கு நல்ல பலன் கிடைத்து தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். புதிய பொறுப்புகள் வந்தாலும் அவற்றை திறமையாக நிறைவேற்றி பாராட்டு பெறுவீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைத்து பொருளாதார நிலை சீராகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் உருவாகும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் அதிகரிக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் மனநிறைவை தரும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், உணவு மற்றும் ஓய்வில் கவனம் செலுத்துவது நல்லது. மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்படுவார்கள். தேவையற்ற பிடிவாதத்தை தவிர்த்து நிதானமாக முடிவெடுத்தால் நினைத்த காரியங்கள் அனைத்தும் வெற்றியாகும்.

அதிர்ஷ்ட நிறம்: பச்சை, வெள்ளை. அதிர்ஷ்ட எண்: 6,8

அதிர்ஷ்ட நாள்: வெள்ளி, புதன். இந்த வாரம் ரிஷபத்திற்கு 8/10 மதிப்பெண்

**மிதுனம்:** புதிய வாய்ப்புகள் கதவைத் தட்டும் வாரமாக இது அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். உங்கள் பேச்சுத் திறமை மற்றும் புத்திசாலித்தனத்தால் முக்கியமான காரியங்களை எளிதாக சாதிப்பீர்கள். பணவரவு திருப்திகரமாக இருந்து, தடைபட்டிருந்த தொகைகள் கைக்கு வரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் அதிகரிக்கும். உறவினர்களின் ஆதரவு மன உற்சாகத்தை தரும். காதல் உறவுகளில் நல்ல புரிதல் உருவாகும். உடல்நலத்தில் சிறிய சோர்வு அல்லது தூக்கமின்மை ஏற்படலாம் என்பதால் போதுமான ஓய்வு அவசியம். மாணவர்கள் கவனத்துடன் படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். அவசர முடிவுகளையும் தேவையற்ற வாக்குவாதங்களையும் தவிர்த்தால் இந்த வாரம் பல சாதனைகளை அடைய முடியும்.

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், பச்சை. அதிர்ஷ்ட எண்: 5, 9

அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி. இந்த வாரம் மிதுனத்திற்கு 8.5/10 மதிப்பெண்

**கடகம்:** நல்ல மாற்றங்களும் நிம்மதியும் தரும் வாரமாக இது அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் இருந்த தடைகள் விலகி முன்னேற்றப் பாதை உருவாகும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த நல்ல தகவல் உங்களை மகிழ்ச்சியடையச் செய்யும். பணவரவு திருப்திகரமாக இருந்து, குடும்பத் தேவைகளை எளிதாக நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் அதிகரிக்கும். கணவன்-மனைவி இடையே அன்பு வலுப்பெறும். பிள்ளைகளின் வளர்ச்சி மனநிறைவை தரும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், மன அழுத்தத்தை குறைத்து போதுமான ஓய்வு எடுத்துக்கொள்வது நல்லது. மாணவர்கள் கல்வியில் கவனத்துடன் செயல்பட்டால் சிறந்த பலன் கிடைக்கும். உணர்ச்சிவசப்பட்டு முடிவெடுப்பதை தவிர்த்து நிதானமாக நடந்துகொண்டால் இந்த வாரம் பல வெற்றிகளை அடைவீர்கள்.

அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, இளஞ்சிவப்பு. அதிர்ஷ்ட எண்: 2,7

அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன். இந்த வாரம் கடகத்திற்கு 8/10 மதிப்பெண்

**சிம்மம்:** சாதனைக்கும் பாராட்டுக்கும் வழிவகுக்கும் வாரமாக இது அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் உங்கள் திறமை வெளிப்பட்டு முக்கியமான வாய்ப்புகள் கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும், புதிய பொறுப்புகளும் உங்களை உற்சாகப்படுத்தும். பணவரவு சீராக இருந்து, தடைபட்டிருந்த வரவுகள் கைக்கு வந்து நிம்மதி தரும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கணவன்-மனைவி இடையே புரிதல் அதிகரிக்கும். உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். உடல்நலத்தில் பெரிய பிரச்சனை எதுவும் இல்லை என்றாலும், அதிக வேலைப்பளுவால் சோர்வு ஏற்படலாம். மாணவர்கள் முயற்சிக்கு ஏற்ற வெற்றி பெறுவார்கள். தேவையற்ற தற்பெருமையையும் கோபத்தையும் தவிர்த்து பணிவுடன் செயல்பட்டால் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும்.

அதிர்ஷ்ட நிறம்: தங்க மஞ்சள், ஆரஞ்சு. அதிர்ஷ்ட எண்: 1,5

அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, செவ்வாய், இந்த வாரம் சிம்மத்திற்கு 8.5/10 மதிப்பெண்

**கன்னி:** உழைப்புக்கு உரிய பலன் கிடைக்கும் வாரமாக இது அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் உங்கள் திட்டங்கள் வெற்றிப் பாதையில் செல்லும். புதிய பொறுப்புகள் வந்தாலும் அவற்றை திறமையாக நிறைவேற்றி நல்ல பெயர் பெறுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருந்து, செலவுகளை சமாளித்து சிறிய சேமிப்பையும் உருவாக்குவீர்கள். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். கணவன்-மனைவி இடையே புரிதல் மேம்படும். பிள்ளைகளின் கல்வி தொடர்பான நல்ல செய்திகள் மனநிறைவை தரும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அஜீரணம் மற்றும் சோர்வு ஏற்பட வாய்ப்புள்ளதால் உணவு முறையில் கவனம் செலுத்துங்கள். மாணவர்கள் கவனமாக படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். தேவையற்ற விமர்சனங்களையும் அதிக சிந்தனையையும் தவிர்த்து செயல்பட்டால் இந்த வாரம் நினைத்த காரியங்கள் அனைத்தும் நிறைவேறும்.

அதிர்ஷ்ட நிறம்: பச்சை, இளநீலம். அதிர்ஷ்ட எண்: 5,6

அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி. இந்த வாரம் கன்னிக்கு 8/10 மதிப்பெண்.

**துலாம்:** சமநிலையும் சிறப்பான முன்னேற்றமும் தரும் வாரமாக இது அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் எதிர்பார்த்த வாய்ப்புகள் கிடைத்து வளர்ச்சி காண்பீர்கள். புதிய தொடர்புகள் எதிர்காலத்திற்கு நல்ல பலன் தரும். பணவரவு சீராக இருந்து, தடைபட்டிருந்த தொகைகள் கைக்கு வந்து நிம்மதி கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் வலுப்பெறும். காதல் உறவுகளில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். உடல்நலத்தில் பெரிய பிரச்சனை எதுவும் இல்லை என்றாலும், அதிக அலைச்சலால் சோர்வு ஏற்படலாம். போதுமான ஓய்வு எடுத்துக்கொள்வது நல்லது. மாணவர்கள் கல்வியில் கவனத்துடன் செயல்பட்டால் வெற்றி பெறுவார்கள். முக்கிய முடிவுகளை அவசரப்படாமல் நிதானமாக எடுத்தால் அனைத்து முயற்சிகளும் சாதகமாக அமையும்.

அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, இளஞ்சிவப்பு. அதிர்ஷ்ட எண்: 6,9

அதிர்ஷ்ட நாள்: வெள்ளி, சனி. இந்த வாரம் துலாமிற்கு 8.5/10 மதிப்பெண்

**விருச்சிகம்:** தைரியமும் வெற்றியும் அதிகரிக்கும் வாரமாக இது அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் இருந்த தடைகள் விலகி புதிய முன்னேற்றம் உருவாகும். உங்கள் உழைப்புக்கு உரிய அங்கீகாரமும் பாராட்டும் கிடைக்கும். எதிர்பார்த்த பணவரவு கைக்கு வந்து பொருளாதார நிலை வலுப்பெறும். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும். கணவன்-மனைவி இடையே புரிதல் அதிகரித்து உறவு வலுவடையும். உறவினர்களின் ஆதரவும் கிடைக்கும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக வேலைப்பளுவால் சோர்வு மற்றும் உடல் அசதி ஏற்படலாம். மாணவர்கள் கல்வியில் கவனத்துடன் செயல்பட்டால் சிறந்த பலன் பெறுவார்கள். கோபத்தையும் அவசர முடிவுகளையும் தவிர்த்து நிதானமாக செயல்பட்டால் இந்த வாரம் பல நல்ல மாற்றங்களை காண்பீர்கள்.

அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அடர் மஞ்சள். அதிர்ஷ்ட எண்: 9,2

அதிர்ஷ்ட நாள்: செவ்வாய், வியாழன். இந்த வாரம் விருச்சிகத்திற்கு 8.5/10 மதிப்பெண்

**தனுசு:** அதிர்ஷ்டமும் வளர்ச்சியும் தரும் வாரமாக இது அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைத்து உங்கள் முயற்சிகள் நல்ல பலன் தரும். மேலதிகாரிகளின் ஆதரவும், முக்கிய நபர்களின் அறிமுகமும் எதிர்கால முன்னேற்றத்திற்கு உதவும். பணவரவு திருப்திகரமாக இருந்து, நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் அதிகரிக்கும். கணவன்-மனைவி இடையே அன்பு வலுப்பெறும். வெளியூர் பயணம் தொடர்பான நல்ல செய்திகள் கிடைக்கலாம். உடல்நலத்தில் பெரிய பிரச்சனை எதுவும் இல்லை என்றாலும், உணவு மற்றும் தூக்கத்தில் கவனம் செலுத்துவது நல்லது. மாணவர்கள் போட்டித் தேர்வுகளில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். தேவையற்ற வாக்குறுதிகளை தவிர்த்து திட்டமிட்டு செயல்பட்டால் அனைத்து முயற்சிகளும் வெற்றியாகும்.

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், ஆரஞ்சு. அதிர்ஷ்ட எண்: 3,9

அதிர்ஷ்ட நாள்: வியாழன், ஞாயிறு. இந்த வாரம் தனுசுக்கு 8.5/10 மதிப்பெண்

**மகரம்:** முயற்சிகள் வெற்றியாக மாறும் வாரமாக இது அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் உங்கள் உழைப்புக்கு நல்ல அங்கீகாரம் கிடைக்கும். நீண்ட நாட்களாக தள்ளிப்போன காரியங்கள் இப்போது சாதகமாக நிறைவேறும். பணவரவு சீராக இருந்து, பழைய கடன்களை குறைக்கும் வாய்ப்பு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் அதிகரிக்கும். கணவன்-மனைவி இடையே இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கி ஒற்றுமை ஏற்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் பெருமையை தரும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக வேலைப்பளுவால் சோர்வு மற்றும் மூட்டு வலி போன்ற சிறிய தொந்தரவுகள் ஏற்படலாம். மாணவர்கள் கவனத்துடன் படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். பொறுமையுடன் செயல்பட்டு தேவையற்ற கவலைகளை தவிர்த்தால் இந்த வாரம் நல்ல முன்னேற்றத்தை காண்பீர்கள்.

அதிர்ஷ்ட நிறம்: நீலம், பச்சை. அதிர்ஷ்ட எண்: 8,4

அதிர்ஷ்ட நாள்: சனி, வெள்ளி. இந்த வாரம் மகரத்திற்கு 8.5/10 மதிப்பெண்

**கும்பம்:** புதிய மாற்றங்களும் முன்னேற்றமும் தரும் வாரமாக இது அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் எதிர்பார்த்திருந்த நல்ல வாய்ப்புகள் கிடைத்து வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் திறமைக்கு உரிய பாராட்டும் கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருந்து, தேவையான செலவுகளை எளிதாக சமாளிப்பீர்கள். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும். கணவன்-மனைவி இடையே புரிதல் அதிகரித்து உறவு வலுப்பெறும். நண்பர்களின் உதவியால் ஒரு முக்கிய காரியம் வெற்றியடையும். உடல்நலத்தில் பெரிய பிரச்சனை எதுவும் இல்லை என்றாலும், போதுமான ஓய்வு மற்றும் தூக்கம் அவசியம். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். அவசர முடிவுகளை தவிர்த்து திட்டமிட்டு செயல்பட்டால் இந்த வாரம் பல நல்ல வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

அதிர்ட நிறம்: அடர் நீலம், ஊதா. அதிர்ஷ்ட எண்: 8,11

அதிர்ஷ்ட நாள்: சனி, புதன். இந்த வாரம் கும்பத்திற்கு 8/10 மதிப்பெண்

**மீனம்:** நம்பிக்கையும் நற்செய்திகளும் நிறைந்த வாரமாக இது அமையும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தில் உங்கள் முயற்சிகளுக்கு நல்ல பலன் கிடைத்து எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டாகும். புதிய வாய்ப்புகள் தேடி வந்து உங்கள் எதிர்கால வளர்ச்சிக்கு வழிவகுக்கும். பணவரவு திருப்திகரமாக இருந்து, நீண்ட நாட்களாக காத்திருந்த வருமானம் கைக்கு வந்து மனநிம்மதி தரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் அதிகரிக்கும். கணவன்-மனைவி இடையே அன்பும் புரிதலும் வலுப்பெறும். உறவினர்களின் ஆதரவு உற்சாகத்தை தரும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், அதிக அலைச்சலால் சோர்வு ஏற்படலாம். போதுமான ஓய்வு சத்தான உணவும் அவசியம். மாணவர்கள் கல்வியில் கவனத்துடன் செயல்பட்டால் சிறந்த வெற்றி பெறுவார்கள். தேவையற்ற குழப்பங்களையும் உணர்ச்சிவசப்பட்ட முடிவுகளையும் தவிர்த்து நிதானமாக செயல்பட்டால் இந்த வாரம் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நிறைவேறும்.

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், இளம்பச்சை, அதிர்ஷ்ட எண்: 3,7

அதிர்ஷ்ட நாள்: வியாழன், திங்கள். இந்த வாரம் மீனத்திற்கு 8.5/10 மதிப்பெண்

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்-ரொறன்ரோ

## SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO

3025 Kennedy Road, Unit #10, Scarborough, ON. M1V 1S3



## ஆடி அமாவாசை
## பிதிர்தர்ப்பண மோட்ச சாந்தி வழிபாடு
## 11.08.2026 செவ்வாய்க்கிழமை

**ஆடி அமாவாசை தினத்தில் இறைபதம் அடைந்த நம் முன்னோர்களை நினைந்து, பிதிர்தோஷங்கள் நீங்க பிதிர் தர்ப்பணம் செய்து மோட்ச தீபம் ஏற்றி மோட்ச சாந்தி வழிபாடு செய்வது சிறந்தது.**

ஆடிஅமாவாசை விரத தினத்தை முன்னிட்டு காலை 7:45 மணி முதல் கௌரி அம்பிகா சமேத கேதீஸ்வரநாதப் பெருமானுக்கு விஷேட அபிஷேகம், 10:00 மணிக்கு விஷேட பூஜை, தொடர்ந்து வசந்தமண்டப பூஜை என்பன நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

**காலை 7:00 மணிமுதல் 1:00 மணிவரை ஆலயத்தில் பிதிர்தர்ப்பண மோட்ச சாந்தி வழிபாடுகள் செய்யலாம். அடியார்களின் காலதாமதத்தைத் தவிர்க்கப் பல சிவாச்சார்யர்களை ஆலயம் ஒழுங்கு செய்துள்ளது.**



## ஆடிப்பூரம் 14.08.2026 வெள்ளிக்கிழமை
## அம்பாளுக்கு நடைபெறும் ருதுசாந்திப் பெருவிழா

ருதுசாந்திப் பெருவிழாவில் நாகபூஷண கருமாரி அம்பாளுக்கு காலை 6:30 மணிமுதல் கும்பபூஜை, திரவிய அபிஷேகம் கணபதி ஹோமம், துர்க்காசூக்த ஸ்ரீசூக்த ஹோமம் நடைபெற்று மூலிகைகள், வாசனைத்-திரவியங்கள், நவரத்தினங்கள், பஞ்சலோகங்கள், வாசனை மலர்கள், மூலிகை வேர்வகைகள், மூலிகை இலைகள் நிறைந்த 108 கலசங்கள் பூஜை செய்யப்பட்டு ஒவ்வொரு குடும்பத்தவரும் ஒவ்வொரு கலசம் (குடம்) ஏந்தி வீதிவலமாக வந்து ஸ்ரீ நாகபூஷண கருமாரி அம்மனுக்கு ருதுசாந்தி - மங்கள நீராட்டு விழா நடைபெறும்.

மாலை 5:00மணிமுதல் விஷேட பூஜையும், 6:00 மணிக்கு வசந்த மண்டபத்தில் ருதுசாந்திப் பெருவிழா 64 விதமான (சதுஸ்சஷ்டி) உபசாரங்களும் சமர்ப்பித்து விஷேட வழிபாடுகள் நடைபெறு அன்னை சிவலிங்க பூஜை வடிவினளாக கைலாச வாகனத்தில் வீதிவலம்வரும் அருட்காட்சியும் நடைபெறும்.

## 21.08.2026 வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரதம்
## சுமங்கலி பூஜையும் திருவிளக்குப் பூஜையும்



காலை 7:30 மணிமுதல் வரலட்சுமி விரத தினத்தை முன்னிட்டு ஸ்ரீ மகாலட்சுமிக்கு 108 வலம்புரிச் சங்குகளினால் அஷ்டோத்தரசத சங்காபிஷேகமும், சப்பறத் திருவிழாவை முன்னிட்டு ஸ்ரீ நாகபூஷண கருமாரி அம்மனுக்கு நவகலச அபிஷேகமும் விஷேட பூஜைகளும் நடைபெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

மாலை 5:00 மணிக்கு சாயரட்சைப் பூஜையும், தொடர்ந்து சுமங்கலிப் பிரார்த்தனையும் திருவிளக்குப் பூஜையும், தொடர்ந்து 7:00 மணிக்கு வசந்தமண்டப பூஜையும், வரலட்சுமி விரத நூல் கட்டுதல் என்பன நடைபெறும்.

**திருவிளக்குப் பூஜையில் பங்கு பற்றும் அடியார்கள் முற்கூட்டியே ஆலயத்தில் பெயர்களைப் பதிவு செய்வதுடன் குறிப்பிட்ட நேரத்திற்கு ஆலயத்திற்கு வருகை தருமாறு வேண்டுகின்றோம்.**

## ஸ்ரீ நாகபூஷண கருமாரி அம்பாள் அலங்கார உற்சவம்
## 14.08.2028 வெள்ளி முதல் 23.08.2026 ஞாயிறு வரை




மாணவர்கள் கல்வி, கலைகளில் சிறப்படையவும், வயோதிபர்கள் தேகதிட ஆரோக்கியம் பெறவும், திருமண வயதில் உள்ளவர்கள் திருமணபாக்கியம் பெறவும், குடும்பத்தில் பிரிவினைகள், சச்சரவுகள் நீங்கி குடும்ப அன்னியோனியம் பெற்று சந்தோசத்துடன் வாழவும். தம்பதிகள் சந்தான பாக்கியம் (குழந்தைச் செல்வம்) பெறவும். நோய், துன்பங்களில் அல்லல்படுவோர் ஆரோக்கியம் பெறவும். உலக அமைதி சமாதானத்துடன், தாயகத்தில் நிரந்தர அமைதியும் சுபீட்சமும் பெறவும். அனைவரும் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் பெற்று மகிழ்வான வாழ்வு வாழவும் வேண்டி 10 தினமும் மாலை 6:40 மணிக்கு நடைபெறும் விசேட ஹோமம் மற்றும் அடியார்கள் பங்குகொள்ளும் குங்கும அர்ச்சனை ஆகியவற்றில் பங்கு பற்றி இறையருள் பெறுமாறு வேண்டுகின்றோம்.


| கைலாச வாகனக்காட்சி | சப்பற அலங்காரக் காட்சி | தேர் அலங்காரக் காட்சி |
|---|---|---|
| 14.08.2026 வெள்ளி | 21.08.2026 வெள்ளி | 22.08.2026 சனிக்கிழமை |
| மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டப | மாலை 7:00 மணிக்கு வசந்தமண்டப | காலை 8:30 மணிக்கு வசந்தமண்டப |

416.291.8500 vinaayagar.com vinaayagar


Summer Get Together
Reconnect • Reminisce • Relax • Enjoy
SK NDAVARODAYA OSA
CANADA
SKANDA OLD STUDENTS ASSOCIATION
Meet, Catch Up & Make New Memories!
A day filled with great company, delicious food, fun games and wonderful memories!
DATE: SUNDAY AUGUST 09, 2026
TIME: 10.30 AM – 4.30 PM
VENUE: MILLIKEN PARK PICNIC SITE 2
ENJOY A VARIETY OF DELICIOUS FOOD!
LIVE COOKING APPAM!
DELICIOUS MUTTON CURRY!
AND MANY MORE TASTY TREATS!
FUN GAMES FOR ALL AGES!
OUTDOOR GAMES
BOARD GAMES
CARD GAMES
FUN FOR EVERYONE!
Good Food Great Friends Memories That Last!
All are invited!
Come, Join & Enjoy a Day to Remember!


LAMP OF LIFE 1875
DRIEBERG COLLEGE
Join us for our
Annual Picnic
25th Annual Picnic & Annual General Meeting
DRIEBERG COLLEGE CHAVAKACHCHERI
ALUMNI ASSOCIATION – CANADA
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்கம்-கனடா
25வது ஆண்டு கோடைக்கால ஒன்றுகூடலும்;
வருடாந்த பொதுக்கூட்டமும் நடைபெறும்.
Date: Saturday August 15, 2026
Time: 10.00am to 7.00pm
Location: Thomson Memorial Park, Picnic Site - 03
1005 Brimley Road.
(Between South of Ellesmere and North of Lawrence)
Scarborough ON M1P 3E9
பொதுக்கூட்டமும் புது நிர்வாகக்குழுத் தேர்தலும்
பிற்பகல் 1:00 மணிக்கு நடைபெறும்.
Election of the new Committee Members @ 1:00 pm
பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், சிநேகிதர்கள், யாவரும் குடும்பத்துடன் சமூகம் தந்து, 25வது ஆண்டு கோடைக்கால ஒன்றுகூடலில் பங்குபற்றிச் சிறப்பிக்கும்படி வேண்டுகிறோம். காலை, மதிய, உணவும், மாலை சிற்றுண்டியும் வழங்கப்படும். விளையாட்டு போட்டிகளும் இடம் பெறும்.
RSVP before August 10, 2026 - Please Contact:
Gunam Hunt 905-472-0379; Mohan Devabalan 416-274-2169
Rajagopal Mathialagan 416-277-1067; Vauki Devadas 416-266-1234
Reginald Thevaranjan 647-740-2965


எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின்
நூல்கள் வெளியீடு
2026 ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
மதியம் 12:30 தொடக்கம் 1:30 மணிவரை நடைபெற இருக்கின்றது.
நூல்கள்:
தமிழ் ஆரம் சிறுவர் பாடல்கள் - சிறுவர்களுக்கானது.
கதிரவன் குடும்பம் - இளையோருக்கான அறிவியல் கட்டுரைகள்.
அனுபவம் புதுமை – பயணக் கட்டுரைகள்.
இடம்: தமிழிசைக் கலாமன்றம்
1120 Tapscott Road,
Unit – 3, Scarborough, ON, M1X.
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாசகர்கள்,
ரசிகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அனுபவம் புதுமை
தமிழ் ஆரம்
தகவல்: குரு அரவிந்தன்
kurufanclub@gmail.com


1993
அழைப்பிதழ்
கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும்
நூல்களின் சங்கமம் ( நூல் கண்காட்சி 2026 )
Confluence of Books
(Book Exhibition 2026)
ஆகஸ்ட் 16, 2026 ஞாயிற்றுக்கிழமை
காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை
தமிழிசைக் கலாமன்ற மண்டபம்
1120, Tapscott Road, Unit 3
Scarborough, ON, M1X 1S4
இரண்டாவது தடவையாக நூல்களின் கண்காட்சி இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்ச்சியில் பல எழுத்தாளர்கள் தமது நூல்களைக் காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் முன் வந்துள்ளார்கள். சில புதிய நூல்களின் வெளியீடுகளும் நடைபெறவுள்ளன. நூல்களின் கண்காட்சியும் விற்பனையுடன் இளையோர் நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.
இந்த நிகழ்ச்சியில் உங்கள் அனைவரையும் குடும்பத்துடன் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். அதிகமானளவு இளையோர்களையும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பயனடைய வேண்டுகின்றோம்.
அன்புடன்
ரவி கனகசபை, தலைவர், kana-ravi@hotmail.com,
முனைவர் வாசுகி நகுலராஜா, செயலாளர், vasuki.nagularajah@gmail.com
இராச்குமார் குணரட்ணம், பொருளாளர்
மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்கள்
கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய *$30.00* மட்டுமே!
416-752-1524

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8



29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

எமது மக்களுக்கு நன்கு அறிமுகமான
Medcentre Health
Synchronizing Health Sectors
தற்போது எமது சேவைகளும் விரிவுபடுத்தப்பெற்றுள்ளன!
ONE LOCATION. BUT COMPLETE MEDICAL CARE
(416) 297-7777
Medcentre Health
2225 Markham Road
(Ground Floor)
Scarborough, ON M1B 2W4
(Markhan&Finch)



உதயம் 1583 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 7, 2026

# தனது சிறுவயது பரத நாட்டிய அரங்கேற்றத்தில் "நிருத்தியத்தை" நேர்த்தியாக நிலைநாட்டிய செல்வி நில்ஷா சஜிராஜ்!



கடந்த 02-08-2026 அன்று ஞாயிற்றுக்கிழமை பிரம்ரன் மாநகரில் அமைந்துள்ள அழகிய "ரோஸ் தியேட்டர்" மண்டபத்தில் நடைபெற்ற அரங்கேற்றச் செல்வி நில்ஷா சகிராஜ் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றத்தில் பார்வையாளர்களாகவும் சிறப்பு விருந்தினர்களாகவும் உறவினர்கள் நண்பர்களாகவும் கலந்து சிறப்பித்த அனைவரையும் சில மணிநேரத்திற்கு "கட்டிப்போடும்" அளவிற்கு அமைந்தது என்பதே சரியான பார்வையாகும்.

அவரது நடனத் திறமைக்கும் அழகிய நடன உருப்படிகளை தனது சிறிய வயதிலும் கையாண்ட முறை மற்றும் மேடையின் முழுப்பகுதியையும் நேர்த்தியாக பயன்படுத்திய பயிற்சியின் மகத்துவம் மற்றும் நில்'ா வின் குரு ஸ்ரீமதி நிவேதா ராமலிங்கத்தின் அற்புதமான கற்பித்தல் திறன், நடனங்களை அரங்கேற்றச் செல்விக்காக உருவாக்கிய ஒழுங்கு ஆகியவை அன்றைய அரங்கேற்றத்தை "அனைவராலும் "பேசப்படும்" வகையில் மேடையில் சமர்ப்பிக்க உழைத்த அனைவருக்கும் ஒரு வெற்றிகரமான நாள் என்றே குறிப்பிட வேண்டும்.
(தொடர்ச்சி 2ம் பக்கம்)

# ஸ்காபுறோவில் சிறப்பாக நடைபெற்ற "சாமந்தி" ஆண்டிதழின் வெளியீட்டு விழா

கனடாவில் நன்கு அறியப்பெற்ற எழுத்தாளரும் கவிஞரும் பேச்சாளருமான அகணி சுரேஸ் அவர்களை ஆசிரியராகக் கொண்டு முதலாவது இதழ் கண்ட "சாமந்தி" ஆண்டிதழின் வெளியீட்டு விழா கடந்த 02-08-2026 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுறோவில் சிறப்பாக நடைபெற்றது.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் ரவீந்திரநாதன் கனகசபை அவர்களின் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் கவிஞர்கள் எழுத்தாளர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். இங்கே காணப்படும் படத்தில் "சாமந்தி" ஆண்டிதழின் ஆசிரிய குழவில் அங்கம் வகிக்கும் இலக்கியவாதிகள் உட்பட பல எழுத்தாளர்கள் மகிழ்ச்சியுடன் மேடையில் நிற்கையில் சாமந்தி-2026 இதழ் வெளியிடப்பெறுவதைக் காணலாம்.



# கனடாவில் இயங்கிவரும் "ஓந்தாச்சிமடம் மக்கள் – கனடா ஒன்றியம்" நடத்திய "கோடைகால ஒன்றுகூடல்" குதூகலமாக கொண்டாடப்பெற்றது!

எமது தாய்த் தமிழ் மண்ணின் கிழக்கில் ஒரு அற்புதப் புள்ளியாய் விளங்கும் "ஓந்தாச்சிமடம் கிராமத்தை பிறப்பிடமாகவும் புகுந்த இடமாகவும் கொண்டு கனடாவில் வாழ்ந்து வரும் அன்பர்களால் ஆரம்பிக்கப்பெற்று இங்கு இயங்கிவரும் "ஓந்தாச்சிமடம் மக்கள்-கனடா ஒன்றியம்" நடத்திய "கோடைகால ஒன்றுகூடல்" 2026" முழுநாள் நிகழ்வு 03-08-2026 அன்று திங்கட்கிழமை குதூகலமாக கொண்டாடப்பெற்றது!
(தொடர்ச்சி 6ம் பக்கம்)





# சிறப்பாக நடைபெற்ற அரிஷன் சத்தியசிலனின் "சங்கீத சமர்ப்பணம்"

புகழ்பெற்ற இசையாசிரியை ஸ்ரீமதி ஜெயராணி சிவபாலன் அவர்களின் மாணவரும் சத்தியசீலன் தம்பதியின் புதல்வருமாகிய இசைச் செல்வன் அரிஷன் சத்தியசீலனின் "சங்கீத சமர்ப்பணம்" இசை அரங்கேற்றம் கடந்த 25-07-2026 அன்று சனிக்கிழமை மாலை விற்பி நகரத்தில் உள்ள அழகிய மண்டபத்தில் நடைபெற்றது. இளைய தலைமுறையைச் சேர்ந்த பக்கவாத்தியக் கலைஞர்கள் பங்கு கொண்டு சிறப்பித்த இந்த இசை நிகழ்வில் மண்டபம் நிறைந்த ரசிகப் பெருமக்கள் கூடியிருந்து அரிஷன் சத்தியசிலனின் இசை ஆற்றலை ரசித்து பாராட்டிச் சென்றனர்.
இங்கே காணப்படும் படத்தில் நிகழ்ச்சியின் இறுதியில் குரு ஜெயராணி சிவபாலனை மேடையில் சத்தியசீலன் தம்பதியினர் கௌரவிப்பதையும் அருகில் பக்கவாத்தியக் கலைஞர்கள் சேர்ந்து நிற்பதையும் காணலாம்.